
ஸ்ரீ

# ஸ்ரீ ராமாநுஜன் 281

சென்னை ஸத்கிரந்த ப்ரகாசன ஸபையின் சார்பாக
மாதந்தோறும் வெளிவருவது
ஆசிரியர்: P. B. அண்ணங்கராசாரியர்.

ஸம்புடம் 24 | விரோதிக்ருது வருஷ மாசி மீ 1-3-1972 | ஸஞ்சிகை 5

## "மாசிப் புனர்பூசங் காண்மினின்று"

உபதேசரத்தினமாலையில், மாமுனிகளால் *கொல்லி நகர்க்கோன் குலசேகரன் பிறப்பால் நல்லவர்கள் கொண்டாடும் நாள்* என்று குலாவப்பட்ட மாசிப் புனர்பூசம் ஸகல விஷ்ணுவாலயங்களிலும் சிறப்புறக் கொண்டாடப் பெற்றது. இவ்வாழ்வாரருளிச் செய்த பெருமாள் திருமொழியிலிருந்து சில சுவைப் பொருள்களை ஈண்டனுபவிப்போம். அதில் முதற் பதிகத்தில் இரண்டாம் பாட்டில் * அரங்கத்தரவணையிற்பள்ளி கொள்ளும் மாயோனை மணத்தூணே பற்றி நின்று என் வாயார என்று கொலோ வாழ்த்துநாளே'' என்கிற பாரிப்பு உள்ளது. அழகிய மணவாளனுடைய கர்ப்பக்ருஹத்தினுள் ஸ்வர்ண கவசமிடப் பெற்ற இரண்டு தூண்கள் உள்ளன. அவற்றுக்குத் திருமணத்தூண் என்பது ஸம்பிரதாயத் திருநாமம். இத்திருத்தூணைப்பற்றிக் குலசேகராழ்வார் தவிர வேறோராழ்வாரும் பேசிற்றிலர். இங்கு "மாயோனை மணத்தூணினருகே நின்று'' என்று கூறியிருக்கலாம். "பற்றி நின்று'' என்றுள்ளது. இவ்வருளிச் செயலின் சுவையை ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் பட்டர் ஒரு சுலோகத்தினால் காட்டியருளியிருப்பது மிகவற்புதம். அந்த சுலோகம் வருமாறு;

" சேஷசய லோசநாம்ருத நதீ ரயாகுலித லோலமாநநாம்,
ஆலம்பமிவ ஆமோதஸ்தம்பத்வய மந்தரங்கமபியாம:.''

என்பதாம். இதன் கருத்தாவது;—பெரிய பெருமாளுடைய திருக்கண்ணோக்கமாகிற அமுத வாற்றின் பெரு வெள்ளமானது, அநுபவிக்க இழிந்தவர்களை ஒருமித்து (ஸூதாரித்து) நிலைநின்று அநுபவிக்க வொட்டாமல் தாக்கித்தள்ளி அசைக்குமாம்; அப்போது அவர்கள் எதையேனும் பற்றிக் கொண்டல்லது நிற்கமுடியாது, ஆற்றின்

பெருவெள்ளத்தில் அடித்துக் கொண்டு போமவர்களுக்கு ஒரு பிடிமானம் கிடைத்தால் தானே ஸமுதாரிக்க முடியும். அதுபோல, இங்கும் பற்றுவதற்கு ஓர் ஆலம்பம் வேண்டியிருக்குமே, அதற்காக நாட்டப்பட்ட ஸ்தம்பங்களோ இவை! என்று உல்லேகிக்கும்படியாகவுள்ளதாம். இது பட்டருடைய விலக்ஷண புத்தி சமத்காரம்.

அடுத்த இரண்டாம் பதிகம் *தேட்டருந் திறல்தேனினை யென்பது பாகவதோத்தமர்களின் பெருமையை யநுபவிப்பது. நம்மாழ்வார் திருமங்கையாழ்வார் முதலானோரும் பாகவதர்களின் பெருமைகளைப் பரக்கப் பேசியிருந்தாலும் அதை இவ்வாழ்வார் பேசியிருப்பது அதிவிலக்ஷணம். (2)* ஆடிப் பாடி யரங்கவோவென்றழைக்கும் தொண்டரடிப்பொடி ஆடநாம் பெறில், கங்கைநீர் குடைந்தாடும் வேட்கை என்னாவது! என்கிறார். ஸ்ரீவைஷ்ணவர்களின் ஸ்ரீபாத தூளிகள் கங்கா தீர்த்தத்திற் காட்டிலும் புனிதமான தென்கிற அத்யவஸாயமுடைமை காண்க. அதற்கடுத்த மூன்றாம்பாட்டில் "அரங்கன் கோயில் திருமுற்றம் சேறு செய் தொண்டர் சேவடிச் செழுஞ்சேறு என் சென்னிக்கணிவனே" என்கிறார். ராஜாதிராஜரான விவர் கஸ்தூரீ திலகமணிந்து கொண்டு விளங்கவேண்டியவர் தொண்டர் சேவடிச் சேற்றை யணிந்து கொள்ள விருப்பங் காட்டியிருப்பது வியக்கத்தக்க தல்லவா?

திருவேங்கடத்தைப்பற்றின நான்காவது பதிகம் ஊனேறுசெல்வ மென்பது பரம போக்யமானது. இதில் ஒவ்வொரு பாசுரத்திலும் (திருமலையில்) ஒவ்வொருவிதமான பிறவியை விரும்புகிறார். முதற்பாட்டில் * கோனேரி வாழுங் குருகாய்ப் பிறப்பேனே * என்று ஸ்வாமிபுஷ்கரிணியில் கொக்காகப் பிறக்க விரும்பினார். அது பறந்து செல்லக் கூடிய பிராணியாதலால் வேறிடம் செல்ல மாட்டாததான மீனின் பிறவியை விரும்பினார் இரண்டாம் பாட்டில். நீர் வற்றிப்போனால் மீன் முடியுமேயென்று அப்பிறவியை வெறுத்து * வேங்கடக்கோன் தான் உமிழும் பொன்வட்டில் பிடிப்பானொரு கிங்கரனுடைய பிறவியை விரும்பினார் மூன்றாம் பாட்டில். பொன்வட்டில் பிடித்தால் களவு செய்யத்தீயபுத்தியுண்டாகுமோ வென்றஞ்சி *வேங்கடத்துச் செண்பகமாய் நிற்க விரும்பினார் நாலாம் பாட்டில். ஸத்யபாமைப் பிராட்டிக்காகக் கற்பகத்தரு பெயர்க்கப்பட்டு வேறோரிடம் சென்று சேர்ந்ததுபோல செண்பகத்தருவும் காணிக்கை ஸமர்ப்பிக்கும் மஹாப்ரபுக்களால் பெயர்த்துக் கொண்டு போகப்படலாமோ என்றதிசங்கித்து ஒன்றுக்கு முதவாத மலட்டு மரமான தம்பகமாய் நிற்கும் நிலையை விரும்பினார் ஐந்தாம் பாட்டில். காட்டுமரங்களை வெட்டிக் கொண்டுபோகும் அரசாங்கத்தாரால் இதுவும் வெட்டிக் கொண்டு போகப்படுமோ என்றதிசங்கித்துத் திருமலையிலேயே நிலைத்து நிற்கும் ஒரு குவடாகப் பிறக்க வேணுமென்று பாரித்தார் ஆறாம்பாட்டில். பௌத்த விக்ரஹமடிக்க அதையும் பெயர்த்துக் கொண்டு போவர்களோ வென்று அதிசங்கித்துத் திருவேங்கடமலைமேல் கானாறாய்ப்பாய வேணுமென்று பாரித்தார் எழாம்பாட்டில். கானாறாய்ப் பெருகுமது வேறோரிடம் சென்று சேருமாதலால் அப்பிறவியையும் வெறுத்து திருமலைக்கு வழியாக நிற்கப் பாரித்தார் எட்டாம் பாட்டில். வழியானது அவ்வவர்களது ஸௌகரியத்திற்கு ஏற்றவாறு அமைத்துக்கொள்ளப்படுமதாகையாலே தாம் ஒருவழியாய்நிற்க, வேறுருவழி அமைந்து விடுமோ என்று மதிசங்கையினால் திருவேங்கடமுடையான் கோயிலின் வாசலில் படியாய்க்கிடக்கும் படியைப் பாரித்தார் ஒன்ப

தாம்பாட்டில். 'படியாய்க் கிடந்து உன் பவளவாய் காண்பேனே' என்ற பாரிப்புக்குப் பயனில்லாதபடி அதற்கு ஸுவர்ணகவசமிட்டிடுவர்களோ, வென்று சங்கித்து "எம்பெருமான் பொன்மலை மேல் ஏதேனுமாவேனே" என்றார் பத்தாம் பாட்டில்.

"எம்பெருமான் பொன் மலை மேல் ஏதேனு மாவேனே"

கீழே தாம் விரும்பின பிறவிகள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொருவிதமான அநுபபத்திதோன்றிக் கொண்டேயிருந்தமையால் இன்னபிறவியென்று குறிப்பிட மாட்டாது "திருமலையில் ஏதேனு மொரு பிறவியாகுக" என்று தலைக்கட்டுகிறார். இங்கு பட்டர் அருளிச் செய்வராம்— "நானு மறிய வேண்டா, திரு வேங்கட முடையான் தானுமறிய வேண்டா; திருமலையி லுள்ள தொரு பதார்த்தமாகப் பிறக்க வமையும்" என்று. அனந்தாழ்வானருளிச் செய்வது மற்றொரு படியாம், அதாவது "திருவேங்கடமுடையான்தானாகவும் அமையும் "என்று, இவ்வருளிச் செயலின் கருத்து உட்புகுந்து உணரத்தக்கது. சேஷத்வமே வடிவானது ஆத்மஸ்வரூபமாக என்றுணர்ந்தவர்கள் சேஷவ்ருத்திக் குறுப்பான பிறப்பை விரும்புவதே ப்ராப்தமாகும். இப்போது ஆழ்வார்க்குத் திருமலையில் வாஸம் ஒன்றே உத்தேச்யமாக நிற்கையாலே சேஷித்வமோ சேஷத்வமோ அதில் நோக்கில்லாமல் திருமலையில்வாஸமொன்றையே நோக்கி அங்ஙனே விரும்புவதாக நிர்வஹிக்கும் படி. உண்மையில் ஆழ்வார்க்குத் திருவேங்கடமுடை யான்தானாக விருக்கை ஈஷத்தும் அபிமதமன்று. திருமலையில் வாஸமொன்றே உத்தேச்யமென்கிற அபிஸந்தியை நிலைநாட்டுவதொன்றே அனந்தாழ்வான் நிர்வாஹத்தின் உள்ளுறை. கரும்புதின்ன வேணுமென்று விரும்பினவனை நோக்கி, நீ கரும்பேயாகக்கடவாய், என்று ஒருவர் அநுக்ரஹம் செய்தால் அதில் ரஸ முண்டோ?

ஆளவந்தார் ஆத்மஸ்வரூபத்தை ஸித்தித்ரயத்தில் "தேஹேந்த்ரிய மந: ப்ராணதிப்யோந்ய:" என்று நிஷ்கர்ஷித்திருக்கச் செய்தேயும் ஸ்தோத்ரரத்னத்தில் "வபுராதிஷு போபி கோபிவா அஸாநி" என்றும் "குணத: யதாததாவித: அஸாநி" என்று மருளிச்செய்ததை இங்கு ஒருபுடை யொப்பு நோக்குக ... ... .... ...

# விருந்தாவனத்தில் விசேஷமொன்று

விருந்தாவனத்தில் ஸ்ரீமத் கோவர்த்தனம் ஸ்வாமியின் சாச்வதகீர்த்தி ஜயத்வஜமான ஸ்ரீரங்கமன்னாராண்டாள்ஸன்னிதியில் 4.3.72 தொடங்கி 13.3.72 வரை ப்ரஹ்மோத்ஸவம் விசேஷவைபவமாக நடைபெறவிருக்கிறது. அதில் 4,6,8 உத்ஸவ தினங்களில் உபயவேதாந்த பீட வித்வத்ஸம்மேளனத்தை ஸ்ரீமத்பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீமந்நாராயணராமாநுஜஜீயர் ஸ்வாமிகள் ஆங்கு எழுந்தருளியிருந்து சிறப்பாகநடத்தி வைக்கத் திருவுள்ளம் பற்றியிருக்கிறார். வட இந்தியாவிலுள்ள ஸ்ரீவைஷ்ணவபண்டிதர்கள் பலர் இந்நஸம்மேளனத்தில் கலந்து கொள்ளுவார்கள்* நாமும் இதில்கூடியிருந்து குளிரக் கருதியிருக்கிறோம். .... ....

———

ஸ்ரீ

பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்.

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ காஞ்சி பிரதிவாதி பயங்கரம்

அண்ணங்கராசார்யர் ஸ்வாமியின்

விரோதிஸ்ருத் வருஷத்திய

# மீன விசாகோத்ஸவப் பத்திரிகை

ஸ்ரீஸ்வாமியின் எண்பத்தோராவது திருநக்ஷத்திர பூர்த்தியை முன்னிட்டு

## ஸ்ரீ காஞ்சியில் ஸ்வாமியின் திருமாளிகையில்

நாளது பங்குனிமீ 11உ (24-3-72) வெள்ளிக்கிழமை முதல்

பங்குனி 20உ (2-4-72) ஞாயிற்றுக்கிழமை வரை

வேத பாராயணம், திவ்யப்ரபந்தஸேவை, ரஹஸ்யாநு
ஸந்தானம், ஸ்தோத்ரபாடம் வித்வான்களின் உபந்யாஸம்
இவை நடைபெறும்.

ஆப்தர்கள் அனைவரும் கூடியிருந்து சிறப்பாக நடப்பிக்கும்படி
பிரார்த்திக்கப்படுகிறார்கள்.

வேதபாராயண கோஷ்டிகள் கடந்த
ஸம்வத்ஸரங்களிற் போலவே ஸாமவேதம், சுக்லக்ருஷ்ண
யஜுர்வேதம் க்ரமாந்தம் திருவீதி வலத்துடன் நடைபெறும்.

இங்ஙனம்,
பிரதிவாதி பயங்கரம் செல்வமணி என்கிற
ரங்கநாத தாஸன்.

காஞ்சிபுரம்
1-3-1972

---

வைதீகர்களுக்கு ஓர் அறிவிப்பு :— எண்பத்தோராவது வயது பூர்த்திக்காக எண்பத்தொரு வேதபதங்களைப் பற்றின விமர்சம் தனிப் புத்தகமாக வெளியிடப் படும். வடமொழியிலும் தென்மொழியிலும். P.B.A.

# உத்தமதேசிகனும் உத்தமூர்தேசிகரும்

ஹைதராபாத் மஹாநகரத்தில் ஸ்ரீதேசிக ஸபையென்று ஒன்றுளது. அதைச்சேர்ந்த மஹநீயர்கள் நேற்று மார்கழியில் திருப்பாவை மஹோத்ஸவமொன்று நடத்தி திருப்பாவை மலரும் ஒன்று வெளியிட்டுள்ளார்கள். அதன் முகப்பில் Sri Desika sabha, Thiruppavai Festival. ஸ்ரீ வில்லிபுத்தூராண்டாள் திருவுருவப்படம் Souvenir 1972. என்றுள்ளது. [இது அடையாளத்திற்காக எழுதினபடி] இந்த மலர் பதினையிரக்கணக்கான ரூபாய் செலவில் ஏறக்குறைய 175 பக்கங் கொண்டதாக ஆர்ட் பேபரிலேயே வெளியிடப்பட்டுள்ளது. அட்வர்டைஸ்மெண்டுகளே இதில் அதிகம். ஆனாலும் சில கட்டுரைகளுமுண்டு. ஸ்ரீமதஹோபில மடமும் ஸ்ரீபரகாலமடமும் இதற்கு மங்களாசாஸனமளித்துள்ளது. இம்மலரில் வெளியிடுவதற்காகத் திருப்பாவை விஷயமான ஒரு கட்டுரையைத் தெலுங்கு பாஷையில் எழுதியனுப்ப வேணுமென்று இச்சபையார் சில மாதங்களுக்கு முன்பு நம்மைப்பலகால் வேண்டினார்கள். "திருப்பாவையின் திருவவதாரம்" என்னும் பொருள்பற்றித் தெலுங்கு பாஷையில் நீண்டதோர் வியாஸம் அச்சபைக்கு அனுப்பினோம். அதை முகப்பில் வெளியிட்டுள்ளார்கள். "ஆண்டாளும் தேசிகனும்" என்கிற தமிழ் வியாஸம் உத்தமூர் தேசிகருடையது முடிவில் வெளியிடப்பட்டுள்ளது. அதன் பிறகு சிற்சில ஆங்கில வியாஸங்களுமுள்ளன. உத்தமூர் தேசிகருடைய கட்டுரையின் முடிவுரை என்னவென்றால்—

> ஸ்ரீதேசிகனின் பெருமையை ஸ்ரீலோகாசார்யர் பரக்கப் பேசியுள்ளார்; "சீரொன்று தூப்புல் திருவேங்கடமுடையான், பாரொன்றச் சொன்ன பழமொழியுள்— ஓரொன்றுதானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு வானேறப் போமளவும் வாழ்வு."— ஸ்ரீவைஷ்ணவ குலதனமான இந்த ஸ்ரீஸூக்திகளை ஒவ்வொருவரும் தம் இல்லத்தில் வைத்துப் பாதுகாப்பது ஸ்ரீதேசிக பக்தர்களின் கடமையாகும்"

என்றெழுதி முடிக்கப்பட்டிருக்கின்றது. இதைப்பற்றின தத்துவத்தை இவருக்குணர்த்தும் வியாஜத்தினால் உலகுக்கெல்லாமுணர்த்துவோம்.

ஸ்ரீதேசிகனுடைய பிரபாவத்தை ஆத்ய ப்ரஹ்மதந்த்ரஸ்வாமி ச்லோகரூபமாகவும் த்விதீய ப்ரஹ்மதந்த்ரஸ்வாமி தமிழ் வசனமாகவும் பணித்துள்ளார்கள். தமிழ் வசனமான வைபவம் "சென்னை அஸ்மத் தேசிகஸம்ப்ரதாயநிர்வாஹ ஸபை" என்கிற ஸபையின் மூலமாகச் சிலவாண்டுகட்கு முன்பு மறுபதிப்புச் செய்து வெளியிடப்பட்டுள்ளது. இது ஸ்ரீதேசிகன் எழுநூறாண்டு நிறைவுநிலைமலர்களுள் ஒன்றெனத் தெரிகிறது. அது ஸம்ஸ்கிருத ஆங்கில பாஷைகளிலும் மொழி பெயர்த்து வெளியிடப்பட்டுள்ளது. அதில், ஆத்ய ப்ரஹ்மதந்த்ரஸ்வாமி பணித்த சுலோகமாலிகைகளும் அங்கங்கே பலபல கையாளப்பட்டுள்ளன. தமிழ்ப் பாஷையிலுள்ள வைபவமே ஸாக்ஷாத்த்விதீய ப்ரஹ்மதந்த்ரஸ்வாமி பணித்ததாகையாலே ஸ்ரீலோகாசார்யர்க்கும் ஸ்ரீதேசிகனுக்குமுள்ள தொடர்பைப்பற்றி அந்த வைபவ நூல் தெரிவிக்கும் விஷயங்களை வரிசையாக எடுத்துக் காட்டுகிறோம். அதிலிருந்து * சீரொன்று தூப்புல் திருவேங்கடமுடையானென்ற பாட்டின் பாங்கு தெரியவருமென்று. அதில் பக்கம் 11-ல் "தேசிகர் திருவரங்கம் சென்று சேரப் புறப்படுதல்" என்ற மகுடத்தின் கீழுள்ள த்விதீய ப்ரஹ்ம தந்த்ரஸ்வாமி ஸ்ரீஸூக்திகளிவை—

"பின்பு தென்னாடும் வடநாடுந்தொழ நின்ற திருவரங்கத் திருப்பதியை மங்களாசாஸனம் செய்ய விரும்பினார் தேசிகன். ஸகல ஆழ்வார்களும் ஸகல பூர்வாசார்யர்களும் ஈடுபட்டு மண்டியிருந்த ஸ்தலம் அது வாகையாலே அங்கே நித்ய வாஸம் பண்ணவேணுமென்றும், அங்கே நித்யகாலக்ஷேப நிரதர்களான பிள்ளைலோகாசாரியர் ஸுதர்சனபட்டர் முதலானாருடைய திருவடி நிழலிலேயொதுங்கி நெடுங்காலம் வர்த்திக்கவேணுமென்றும் ஆசை கொண்டு புறப்பட்டருளியாச்சுது. "லோகாசார்யபதாம்போஜ ஸேவாஹேவாகதோ த்ருதம், ப்ரதஸ்தே ரங்க நகரீம் வேதாந்தார்யோ மஹாமதா:" என்று அஸ்மதாசார்யர் பணித்த தேசிக திவ்ய சரிதத்திலும் சொல்லிற்று. பேரருளாளன் நியமனங் கொண்டு புறப்பட்டருளின தேசிகன் தேவியாரோடுங்கூட வழியடைவிலே அப்பக்குடத்தான் ஸன்னிதியென்கிற திருப்பேர் நகரிலே சென்று சேர்ந்து அங்குள்ள ஸ்ரீவைஷ்ணவர்களை நோக்கி கோயில் வ்ருத்தாந்தம் விசாரிக்க மளவிலே, அவர்கள் துருஷ்கவ்யநோபப்லவங்களைச் சொல்லி ஸ்வாமி பிள்ளை லோகாசாரியர், அவருடைய திருத்தம்பியாரான அழகிய மணவாளப்பெருமாள் நாயனார். ச்ருதப்ரகாசிகா பட்டர் முதலான பரிகணிதர்களான ஆசார்ய ச்ரேஷ்டர்கள் நம்பெருமாளை யெழுந்தருளப் பண்ணிக்கொண்டு வெளியேறியிருக்குஞ் செய்திகளையும் விசதமாகச் சொல்ல, அது கேட்ட தேசிகன் வேரற்ற மரம்போல விழுந்து துடித்து,"ஸம்ஸாரஸர்ப்பஸந்தஷ்ட மர்த்ய ஸந்த்ராண தீக்ஷிதம், லோகாசார்யம் விநா ரங்கே கதம் வர்த்திது முத்ஸஹே?" [முமுக்ஷுஜந ரக்ஷகரான பிள்ளைலோகாசார்யரில்லாத திருவரங்கத்தில் தான் எப்படி வர்த்திப்பேன்!] என்று சொல்லிச் சொல்லிப் புலம்பி, இப்போது நான் திருவரங்கம் செல்லக் கடவேனல்லேன்; கொங்கு மண்டலத்தில் பாங்கான வோரிடத்தில் சிலகாலம் வாழ்ந்திருந்து ஸ்ரீரங்கஸ்ரீ நிருபத்ரவமாகி நம் பெருமாளும் கூடச் சென்ற ஸ்ரீமல்லோகாசார்ய ப்ரப்ருதிகளான பரமஸாத்விகஸதாசார்ய ஸார்வ பௌமர்களும் ஸ்வஸ்தானம் வந்து சேர்ந்த பிறகு செய்தியறிந்து கொண்டு திருவரங்கத்தேற விடை கொள்ளக் கடவேன்" என்று அதி நிர்வேதத்துடனே அருளிச் செய்து ஸ்ரீரங்கம் செல்லாமே அப்பக்குடத்தான் ஸன்னிதியிலிருந்து நேராகப் பல விடங்களுக்கெழுந்தருளி வானியாற்றங்கரையில் சில மாதங்கள் தங்கியிருந்து அங்கும் இருப்புக் கொள்ளாமல் திருநாராயணபுரத்தில் சில காலமும் பச்சிமவாஹினிக் கரையான ஸ்ரீரங்கபட்டணத்தில் சில காலமும், ஸத்தியமங்கலத்தில் சில காலமும் எழுந்தருளியிருந்தாச்சு. அப்போது ஸ்ரீரங்கம் விரைவில் நிருபத்ரவமாக வேணுமென்பதற்காக ஸ்வாமி தேசிகன் அபீதிஸ்தவமருளிச் செய்து அங்குள்ளாரெல்லாரையும் அந்த ஸ்தவத்தை நித்யமும் நூற்றெட்டாவ்ருத்தி பாராயணம் செய்ய நியமித்தருளி, தாம் அந்த ஸ்தவத்திலிருந்து "நிரஸ்தரிபுஸம்பவே க்வசந ரங்கமுக்க்யே விபோ! பரஸ்பர ஹிதைஷிணாம் பரிஸரேஷு மாம் வர்த்தய" என்கிற பாகத்தை அநவரதமும் அநுஸந்தித்துக் கொண்டு "லோகாசார்ய ததீயஸோதரமுகாந் ஆசார்யவர்யாந் கதா ஸேவேயேதி ஸதா விஷண்ணஹ்ருதய: ஸ்ரீ வேங்கடேசோ குரு:" என்று அஸ்மதாசார்யர் பணித்தபடியே அதுவே புலம்பலாய் மிகுந்த ஆர்த்தியோடே பெரியவாச்சான் பிள்ளை ஸ்ரீஸூக்திகளைக் கேட்டுக் கொண்டு காலம்கழித்து வந்தார். இப்படி கங்குலும்பகலும் கண்துயிலறியாள் கண்ணநீர் கைகளாலிறைக்கும் என்னும் படியாக ஸ்வாமி தேசிகன் அலமாப்போடே எழுந்தருளியிருந்த காலத்திலே வருவார் செல்வார் முகமாக ஸ்ரீரங்க வ்ருத்தாந்தத்தை ஒருநாள் அறியலாச்சுது. அதாவது, பல மஹான்களின் ப்ரபல ப்ரயத்

னங்களாலே ஸ்ரீரங்கநாதன் அபாய மொன்றுமின்றிக்கே திருவரங்கம் பெரிய கோயில் ஸன்னிதி சேர்ந்தருளினதாகவும் ஸ்ரீமல்லோகா சார்ய ஸ்ரீஸுதர்சந பட்டாரக ப்ரப்ருதிகளான ஆசார்யவர்யர்கள் மீண்டெழுந்தருளாமலே" அங்கங்கே திருநாட்டுக்கெழுத்தருளினதாகவும் கேட்டு "அம்ருதம் விஷஸம்மிச்ரம்" என்று போர நொந்து நெடும் போது இதிகர்த்தவ்யதா முக்தரா யிருந்து, அந்தமட்டில் பெருமாளாகிலும் பாங்காக ஸ்வஸ்தானம் வந்து சேரப் பெற்றதே என்று தேறி பிள்ளைலோகாசார்யாதிகளுக்கு ஸ்ரீசூர்ண பரிபாலனம் நடத்தியருளி நிலையிட வொண்ணாத நிர்வேதத்துடனே மூன்று நாள் உபவாஸமாக எழுந்தருளியிருந்து ஒருவாறு திருவுள்ளத்தை ஸமாஹிதமாக்கி "ஸ்ரீமதி லோகாசார்யே திவம் கதேபி ப்ரஸித்த தச்சிஷ்யா:, ஸந்தி கலு ரங்கநகரே தச்சரணச்சாய மாச்ரிதோஸ்மி" [பிள்ளை லோகாசார்யர் திருநாடலங்கரித்தாலும் அவருடைய திருவடி ஸம்பந்திகள் கோயிலிலே வாழ்ந்திருப்பர்களே; அவர்களின் திருவடி நிழலிலே யொதுங்கி வர்த்திக்கக்கடவேன்] என்று பாரித்துக் கொண்டு "ஸ காம மநவாப்யைவ" என்னச் செய்தேயும் "ஆருரோஹ ரதம் ஹ்ருஷ்ட:" என்றாப்போலே ஹர்ஷத்துடனே கோயிலேறப் புறப்பட்டருளியாச்சுது." என்கிற இப்பங்க்திகள் அவ்விடத்திலுள்ளவை. (அதாவது) அந்த ஸ்ரீ கோசத்தின் 11, 12 பக்கங்களிலவை. இதற்கு மேலும் பல விடங்கள் எடுத்துக் காட்ட வேண்டியவையுள்ளன: விரிவுக்கு அஞ்சாமல் காட்டுகின்றோம். அதுதன்னிலேயே கோயிலாத்தான் மகனார்ஸன்னிதியிலே திவ்யப்ரபந்தங்களை ஓதி முடித்தது ஈயுண்ணியாழ்வான் திருக்குமாரர் பக்கலிலே அவற்றின் வியாக்யானங்களை அதிகரித்தது முதலான செய்திகளை விரிவாக எழுதிக் கொண்டு போமடைவில் (பக்கம் 24ல்) "திருப்புன்னையடியில் ஸ்வாமி தேசிகன் அருளிய அர்த்த விசேஷங்கள் என்கிற மகுடத்தின்கீழ்

*த்ரமிட நிகமத்ரஷ்ட்ரா நாதேந யாமுநயோகிநா
யதிந்ருபதிநா கூரேசார்யைஸ் ததா குருகேச்வரை:
புவநகுருபி: க்ருஷ்ணத்வந்த்வேந லம்பிதரக்ஷணே
மம ஹ்ருதி ஸதா ஜீயாத் ஸத்ஸம்ப்ரதாய ஸுசேவதி: —என்றும்.

ஜகத்தேசிகாக்யாந் ஸதாசார்யவர்யாந்
ததீயாச் ச ஸூக்தீர் முஹுச் சிந்தயித்வா,
ஸதாம் ஸந்நிதாநாத் க்ருஹீதாந் ஸதர்த்தாந்
ஸதாம் சாஸநேநேஹ விஜ்ஞாபயாமி * என்றும்,

ஸ்ரீமல்லோககுரூத்தமாந் குணநிதீந் வித்யாநிதீந் ஸாத்விகாந்
ஆசார்யாந் அஸக்ருத் விசிந்த்ய, பணிதீஸ் தேஷாம் ஸதா சிந்தயந்,

தாஸோ வேங்கடநாதநாமககவி: ஸ்ரீரங்கதாம்நி ஸ்திதாந்
ஏதாந் ஸாத்விக ஸஜ்ஜநாந் மம கிரா ஸம்மோதயே ஸாம்ப்ரதம்.

என்றும் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு ச்லோக ரத்னத்தை முகப்பில் விண்ணப்பஞ்செய்து ஸ்வாமி தேசிகன் ஸ்ரீஸூக்திகளை அமோகமாக அருளிச் செய்யும் படியாயிருந்தது. அலையாருங் கடல் போல் முழங்கியும், கங்கை நீர்ப்பெருக்கோ காவிரிப் பெருக்கோ என்னலாம் படிபெருகியும் விம்மிவெளிவந்த அந்ததிவ்ய ஸ்ரீஸூக்திகளின் காம்பீர்ய ஔதார்யங்களை என்ன சொல்வது? நம்பிள்ளையின் புநரவதாரமே ஸ்வாமியென்று ஒரு மிடருக அனைவரும் அறுதியிட்டார்கள். ஸ்வாமி மட்டும் பிள்ளை லோகாசாரியரையும் அழகிய மணவாளப் பெருமாள் நாயனாரையும் ச்ருதப்ரகாசி

காபட்டரையும் ஸாக்ஷாத்தாக ஸேவிக்கப் பெறாத துயரத்தை அடிக்கடி விஜ்ஞாபித்துக் கொண்டிருந்தபடி. அந்தத் துயரத்திற்கு ஒருபரிஹாரமாகவே ஸ்ரீஸூதர் சநார்யவிம்சதியும் ஸ்ரீலோகார்யபஞ்சாசத்துமருளிச் செய்து ஸமாஹிதரானபடி.' என்றெழுதப்பட்டுள்ளது. அதற்கு மேலும்,

ஸர்வசாஸ்த்ரகபளீக்ருதிக்ஷமம் ந்யாஸதத்வமநகம் ததாம் முதே,
லோகதேசிகபராப்ஜபாம்ஸூநா வேங்கடேசகவிநா விபோத்யதே.

என்றுதொடங்கி ஒரு ரேவதித் திரு நாளிலே அற்புதமாக அருளிச் செய்ததாக எழுதப்பட்டுள்ளது.

அதற்கு மேலும் (பக்கம் 27ல்)

"இத்தம் லோகாசார்ய ஸ்ரீபதபங்கஜபராகபரமாணு:
வேங்கடநாத: ப்ரோசே வேதாந்தார்யஸ் ஸதாம் முதே ஸதஸி."

என்று அன்றைய விண்ணப்பத்தைத் தலைக்கட்டியாச்சுது. என்று எழுதப்பட்டுள்ளது. அதற்கு மேலும்.

"ரங்காஸ்தாநவாஸிகளாய் அசேஷசித்த ரஞ்ஜகர்களான ரஸிக வித்வான்கள் சிலர் ஸ்வாமிஸகாசத்திலே விடை கொண்டு நாயமாத்மாச்ருதியின் அர்த்ததத்வத்தை அருள் புரியவேணு மென்று வேண்ட,

"ஸ்ரீபாஷ்யகாரஸ்ரீஸூக்திப்பான பாவநசேதஸாம்,
லோகார்யாணும் பதாம்போஜே சிந்தயந் ஸந் நிவேதயே."

என்று முதலிட்டு ஸவிநயம் பணிக்கத் தொடங்கியாச்சுது. என்றும்; மற்றோர்நாள் உபந்யாஸத்திலே

(ச்லோ) ஸ்ரீமத்க்ருஷ்ணஸமாக்ய தேசிகராத் திவ்யப்ரபந்தாவலி
வ்யாக்யாநாநி விசக்ஷணதி புவநே தாவாதரிஷ்யந் யதி,
ஸத்யம் ஸத்யமிஹாபவிஷ்யதகிலா ஸ்ரீவைஷ்ணவாநாம் கதி:
தௌர்ப்பாக்யோபஹதா யதார்த்த விமலப்ரஜ்ஞாதரித்ராபிச.

என்று விண்ணப்பம் செய்ததாகவும் இப்படி பலபல ச்லோகங்களை ஆத்யப்ரஹ்மதந்திர ஸ்வாமி ஸ்ரீகோசத்திலிருந்து எடுத்துக் காட்டியுள்ளவை ஸ்ரீதேசிகபக்தர்களானஸகல ஸ்ரீவைஷ்ணவர்களுக்கும் "என்னுடைய நெஞ்சகம்பால் சுவர்வழிஎழுதிக் கொண்டேன்" என்று பெரியாழ்வார் பணித்த கணக்கிலே நெஞ்சென்னும் சுவரிலே நன்கு பொறித்துக் கொள்ளத்தக்கவை

அதற்குமேல் (பக்கம் 29ல்) ஒரு மஹாகவி, ஸ்வாமி தேசிகனிடம் வந்து கொக்கரித்து பங்கப்பட்டு ஸ்வாமிக்கு அஷ்டோத்தர சதநாமமாலிகை இயற்றி ஸமர்ப்பித்ததாகச் சொல்லிவருகையில்

மந்த்ரஜ்ஞோ மந்த்ரரத்னஜ்ஞோ மநீஷீ (80) மாந்யமாநித:
லோகாசார்யபதாஸக்தோ லோகதேசிகஸூக்திபுக்,
க்ருஷ்ணஸூரிகுணாம்போதிமக்ந: க்ருஷ்ணார்யஸேவக:
ஸ்ரீவாக்பூஷணதத்வஜ்ஞ: ஸம்சோதிதமதிஸ் ஸுதீ:
ஸதாசார்யபதாஸக்தஸ் ஸச்சிஷ்யகணஸேவித: 90

என்கிற நாமாவளிகள் படிக்கப்பட்டிருக்கின்றன. முடிவில் காட்டிய சரமச்லோகம் இது காணீர்;—

"அப்தே ஸௌம்ய ஸமாஹ்வயே நீதகரே ராசிம் கதே வ்ருச்சிகம்
ராகாயாம் முநிபாஹநாஹ்வயமுநேஸ் தாரே ப்ருகோர் வாஸரே.
விச்வாமித்ர குலாப்தி கௌஸ்துபமணிர் வேதாந்ததேசிகோ மஹாந்
லோகாசார்ய பதாப்ஜ சிந்தந ரதோ லோகம் யயௌ சாச்வதம்" என்பதாம்.

ஆரியர்களே! த்விதீயப்ரஹ்மதந்த்ரஸ்வாமி பணித்த தேசிக வைபவ நூலைக் கொண்டு நிருபித்தவை போதும். ஸமீபகாலத்தில் ஸ்ரீ மான் V. P. ரங்காசாரியர் வெளியிட்ட ஆண்டவன் திருவருளோன்னும் நூலில் இது பற்றியுள்ளவற்றை யுதாஹரித்து இக்கட்டுரையைத் தலைக்கட்டுகிறேன். அதில் (பக்கம் 25ல்) வெளிவந்துள்ளதாவது—

"38. முகப்பில் ஸ்ரீ தேசிகன் திருக்கோலமமைத்து அதன்கீழ் "ஸ்ரீ மாந் வேங்கடநாதார்ய தனியனை யெழுதியுள்ளீர். இது ஸ்வரூபாநுரூபம். இதற்குக் கர்த்தா இன்னாரென்று எழுதிற்றிலீர். அதன்கீழ் "சீரொன்று தூப்பில்" என்றொரு செய்யுளையிட்டு அதன்கீழ் "பிள்ளைலோகாசார்யர்" என்று எழுதியுள்ளீர். இந்தப் பாட்டு அவ்வாசிரியர் பணித்ததென்று உமது கருத்துப்போலும். வைணவர்கள் தனியனென்று வழங்குவதைத் தமிழர்கள் சிறப்புப்பாயிரமென்பர். இப்பாயிரம் இயம்புதற்கு இன்னாரின்னார் உரியரென்று காட்டவந்த நன்னூலாசிரியர்

"தன்னாசிரியன் தன்னொடு கற்றோன்
தன்மாணாக்கன் தகுமுரை காரனென்று
இன்னோர்பாயிர மியம்புதல் கடனே"

என்றொரு சூத்திரம் வகுத்துள்ளார். தனியனியற்றுவதற்கு ஆசார்யரையே முதல் உரிமையாளராகக் காட்டியுள்ளார். பிள்ளைலோகாசாரியர் தேசிகனுக்கு ஆசார்யரென்னும் முறையில் தனியனிட்டால் இஃது அஸம்பாவிதமன்று. அந்த பாக்கியம் தேசிகனுக்குக் கிடைக்கவில்லையென்று த்விதீய ப்ரஹ்மதந்த்ரஸ்வாமி யெழுதிய தேசிக வைபவத்தினால் விளங்கியுள்ளது. தேசிகன் பிள்ளைலோகாசாரியர் திருவடிகளில் ஆச்ரயித்து விமல மநஸ்கராக வேணுமென்கிற பாரிப்புடன் கோயிலுக்கெழுந்தருளினபோது, பிள்ளைலோகாசாரியர் ச்ருதப்ரகாசிகாபட்டர் முதலானோர் நம்பெருமாளை யெழுந்தருளப் பண்ணிக்கொண்டு வெளியேறியிருக்குஞ் செய்தியைக் கேள்விப்பட்டுத் துடிதுடித்துப் பல சுலோகங்களும் செய்யுள்களும் பாடிப் புலம்பிவிட்டு மைஸூர் ப்ராந்தம் சென்றுவிட்டதாக இதிஹாஸமெழுதியுள்ளார். ஆகவே பிள்ளைலோகாசார்யரை தேசிகனுக்கு ஆசார்யராகச் சொல்ல ஔசித்யமில்லையே. ஸ்வாமி தேசிகன் ஸச்சரித்ர ரக்ஷையில் "கரியமேனிமிசை" என்கிற திருவாய்மொழிப் பாசுரத்தின் பொருளை விவரிக்கவேண்டிய அவசியம்நேர்ந்து, பெரியவாச்சான்பிள்ளை ஸாதித்தபடியே விவரித்து "இதி ஆசார்யா:" என்றருளியிருக்கையாலே, தேசிகனுக்குப் பெரியவாச்சான்பிள்ளையை ஆசார்யராகக் கொள்ள நிரம்பிய ஔசித்யமுள்ளது. அவர்தாம் இத்தனியனை இட்டிருக்கலாமென்னப்பார்த்தாலோ இதுவும் ஏலாததாகவுள்ளது. ஏனெனில்; ஏறக்குறைய முந்நூறு வருஷங்களுக்கப்பால் ஏற்பட்டதாய், திருத்தண்காவின பரிஸரத்திலுள்ளதான தூப்பைவனம் என்னும் அக்ரஹாரத்தின் கொச்சைப் பெயரான தூப்பில் என்னுஞ் சொல் இச்செய்யுளில் புகுந்திருக்கையாலே, தும்பைவனம் சொக்கலிங்காசாரி செய்தசெய்யுள் இதுவென்று ஆராய்ந்து முடிவு செய்தார்கள்." என்றுள்ளது. இங்ஙனே உதாஹரிக்க வேண்டியவை பலவுண்டு.

சிலபலவருடங்களுக்கு முன் ஸ்ரீ உ. வே. புதுக் கோட்டை ஸ்ரீநிவாஸராகவாசாரியார் M. A. அவர்கள் தேசிக சில்லரை ரஹஸ்யங்களையச்சிடுகையில் அதில் இந்த *சிறொன்று தூப்பில் பாடலையும் சேர்த்து அச்சிட்டிருந்தார். அப்போது அவர் நமக்குப் பரமஸ்நிக்தராயிருந்த படியால் "இந்தப் பாட்டை நீர்ஸம்பாதித்து வைத்துக் கொண்டிருக்கும் ஓலைச்சுவடிகளில் ஒன்றிலாவது கண்டதுண்டோ? உள்ளபடி யெழுத வேணும்" என்று அவர்க்கு எழுதியிருந்தோம், எதிலுங் கண்டதில்லையென்று விடையிறுத்து நின்றார். பிறகு அவர் காஞ்சிக்கு வரும் போதுகளில் காட்சி தராமலே போவர்.

இதுகாறும் உத்தமூர் தேசிகருடைய கட்டுரையின் கடைப்பகுதியை மட்டும் ஆராய்ந்தோம்; பொதுவாகக் கட்டுரையின் வைகரியை விமர்சிக்குங்கால், கல்யாணங்களில் புரோஹிதர்கள் அநுக்ரஹம் சொல்வதென்று தொடங்கி, "இமௌதம்பதீ" என்றாரம்பித்து "நிரந்தரம் ச்ரேய:ப்ரதோ பூயாதிதி மஹாந்தோநுக்ருஹ்ணந்து" என்றும், "ஏநயோர் தம்பத்யோ: என்றாரம்பித்து' ... பூயாஸ்தாமிதி பவந்தோ மஹாந்தோநுக்ருஹ்ணந்து" என்றும் முடிப்பர்களே அதுதான் நினைவுக்கு வருகிறது. "ஆண்டாளும் தேசிகனும்" என்பது கட்டுரையின் மகுடம்: அதற்குச் சேர ஆண்டாள் பெருமையை தேசிகன் அநுபவித்த ப்ரகாரங்களை கோதாஸ்துதி கொண்டு விளக்கப் புக்கால் வாசிப்பவர்கள் பர்யாப்தி பெறவொண்ணாதபடி பக்கங்கள் ஐம்பதும் அறுபதுமாக எழுதிப் போகலாம்; அல்லது தேசிகன் பெருமையை ஆண்டாள் ஸூசிப்பித்த படியை திருப்பாவையில்ஏதேனு மொருபாசுரங் கொண்டு உலகம் வியக்க விவரிக்கலாம். ஸ்ரீ ராமாயணம் சொல்லுகிறேனென்று ஆரம்பித்து, "ராமாயணம் வால்மீகி இயற்றியது; வால்மீகியென்றால் புற்றில்பிறந்தவரென்று பொருள். புற்றானது பாம்புகளுக்கு உறைவிடம். பாம்புகளில் பல ஜாதிகளுண்டு தண்ணீர்ப் பாம்பும் பாம்புதான். அது ஒன்றும் செய்யாது. ஸர்ப்பம் கடித்தால் மிகவும் அபாயம். அதற்கு மருந்தே கிடையாது. உலகில் மருந்துகடைகள் ஏராளமாயிருக்கின்றன ஆனால் ம... விற்பனை செய்ய ஸர்க்காரின் லைசன்ஸு வாங்க வேண்டும். பழைய காலத்து ...கள் இப்போது கிடைப்பதில்லை. இறந்தகாலம் நிகழ்காலம் எதிர்காலமென்ற ... மூன்றுவிதம். பழையகால மென்பது இறந்த காலத்தைச் சேர்ந்தது. இறந்... பற்றி நாம் சிந்திக்கவே கூடாது. "ஜாதஸ்ய ஹித்ருவோம்ருத்யுர் த்ருவம் ஜந்ம ம்ருதஸ்ய ச, தஸ்மா தபரி ஹார்யேர்த்தே நத்வம் சோசிதுமர்ஹஸி" என்று ... காலம் யிலே சொல்லப் பட்டது. கீதையென்பது உயர்ந்த சாஸ்த்ரம். கோரக்பூரிலவர்களைப் பல விதமாக அச்சிட்டிருக்கிறார்கள் ... ... என்றிப்படி சொல்லி ஜந்ம ம்ரு... போவர்கள். கேட்பவர்கள் மெய் மறந்து கேட்பர்கள். அதுபோலவினைவுக்... ஆண்டாள் பெருமையும் சொன்னபாடில்லை. தேசிகன் பெருமையுமதையைப் பாடில்லை. வாக்பிபங்களோ ஸர்வாத்மநா அநந்விதங்களும் அசடுவழிகாண்டே... நகின்றது.

இதைப் பாருங்கள்;

" ஆசார்யர்கள் செய்ய வேண்டிய தென்ன வெனில் சுறந்த ... சொன்ன த்திற்கான க்ரந்தங்களை ப்ரசாரம் செய்து அவற்றில் ஆழ்ந்த ... வையும். களைப்போல உரைகளிட்டுந் தெளிவுப்படுத்தி"

தாந்த

ாருள்

என்றெழுதிக் கொண்டு போகிறார். சுருக்க ஸித்தாந்த மென்றால் என்னவோ? சிறந்த என்பதன் அச்சுப்பிழை என்று சொல்லி விடலாம். இது கிடக்கட்டும்? அவற்றின் ஆழ்ந்த பொருள்களைப் போல உரையிடுவதாவ தென்னவோ? சிறிது மேலே போவோம்? "ஆண்டாள் ... ... கண்ணனைக் கணவனாகப் பெற விரும்பியிருந்ததை அறிவித்ததுடன் நாராயண பாரம்யத்தையும் திருவஷ்டாக்ஷரம் த்வயம் சரமச்லோகம் என்ற இரஹஸ்யங்களின் பொருளையுங்கூறி ஆசார்யமுகமாக எல்லாம் பெற்று பஞ்சகாலப்ரக்ரியையாக ஆன்மீகத்தை எம்பெருமானுடைய ஆராதனமாக நடத்திக் கொண்டு — — இது கோமூத்ரம் போலே நெடுகப் போய்க் கொண்டிருக்கிறது. (திருப்பாவையில் செவ்வனே குறித்திருக்கிறாள் என்று முடிவாம்.) இந்த வாக்கிய ராசியில் ஆன்மீகத்தை ஆராதனமாக நடத்துவதென்று ஒன்று காணப்படுகிறது. ஆன்மீக மென்பது வடமொழியுமன்று தென்மொழியுமன்று. இக்காலத்தவர்கள் இப்படி அர்த்தமில்லாத சில சொற்களை எழுதிப் போருவதும் பிரசங்க மேடைகளில் பேசுவது முண்டு. [ராஜஸீகம் இத்யாதிவத்.] திருப்பாவையில் திருவஷ்டாக்ஷரார்த்தம் இன்னின்ன விடங்களிலுள்ளது; த்வயார்த்தம் இன்னின்ன விடங்களிலுள்ளது, சரமச் லோகார்த்தம் இன்னின்ன விடங்களிலுள்ளது என்று நிரூபித்து ரஸிகர்களை யுகப்பிக்க பாக்கியமில்லையே. அதற்கு இட்டுப்பிறக்க வில்லையே,

"ஆண்டாள் கண்ணனைக் கணவனாகப் பெற விரும்பியிருந்ததை அறிவித்ததுடன்" என்கிறாரே; திருப்பாவை நடையாடுமிடத்திலுள்ளார் எழுதும் வார்த்தையா இது? நாச்சியார் திரு மொழியில் "மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்" "கொங்கைத் தலமிவை நோக்கிக் காணீர் கோவிந்தனுக்கல்லால் வாயில் போகா" என்றிவை முதலான சில பாசுரங்களுண்டு. திருப்பாவையில் அப்படி ஓரெழுத்துமில்லை.

இராக்ஷஸர் என்பதும் இரஹஸ்யம் என்பதும் பரிஹாஸ்யம். ராக்ஷஸரில் (இ) ..வேணுமானல் இராக்கதர் என்ன வேணும். ரஹஸ்யத்தில் (இ) சேர்க்க ..னல் இரகசியம் என்ன வேணும். மணற் சோற்றில் கல் ஆராய்கிறோமே வெள்கி நிற்கிறேன்.

..ற்கு மேல் சாகாசங்க்ரமணந்யாயேந "பகவத் விஷய கால க்ஷேபத்தை ..கென்று தனியே ஒரு தனியன் பெறுமளவுக்கு ப்ரபலமாக நடத்தியருளி" ஸ்வாமி நடத்தின பகவத் விஷயகால க்ஷேபம் எதுவோ? அதற்கென்று ..ரு தனியன் பெறுமளவானது என்னே? * சிரோன்று ..ப்பல் தானே? ..வதார ஸ்தலத்திலுங் கூட அனுகலாகாதென்று நீதிமன்றங்கள் தோறும் ..டவொருகலோகமா? நிகமபரிமலப்ரஸங்கம் போலே அத்தனியன் ப்ர.. ..லஜ்ஜாவஹமாயிற்றுப் போலும்,

சுஷ்கவாசாம விமர்சேந வ்ருதா காலஸ்ய யாபநம்,
இதோபி மாபூத் இத்யேவ விரம்யாந்யத் விசிந்தயே.

கதா: காஸ்பதி: ப்ரோச்ய பாமராணாம் ந்ருணாம் வ்ருதா,
விப்ரலம்பே குசீர் ஈஷூத் விசிஷ்ய மயி ஜீவதி

இத்தமண்ணங்கராசார்ய: பரமார்த்த ப்ரகாசக:,
அஸமஞ்ஜஸவாக்யாநாம் விமர்சம் பர்யபூரயத்.

8-1-72 ல் சென்னை கவர்னர் K. K. ஷா. சந்திப்பு.



ஸ்ரீரஸ்து.

# உபந்யாஸக ஸௌபாக்யமாலையில்

## பதினைந்தாவது ஸ்தபகம்.

— P. B. அண்ணங்கராசாரியர் —

### ஆழ்வார்களநுபவித்த ஸ்ரீ க்ருஷ்ண திவ்ய சேஷ்டிதங்கள்.

கண்ணபிரானுடைய திவ்ய சரித்திரங்கள் ஸ்ரீ விஷ்ணு புராணம் ஸ்ரீபாகவதம் மஹாபாரதம் ஹரிவம்சம் கர்க்கஸம்ஹிதை முதலானவற்றில் அபரிமிதமாக இருந்தாலும் நம்முடைய ஆழ்வார்கள் தமது திவ்வியப்பிரபந்தங்களில் அநுபவித்திருக்கும் சரிதைகளை மட்டும் ஈண்டெடுத்து விவரிக்க ஆசைகிளர்கின்றது. பகவத் கீதையில் நான்காவது அத்யாயத்தில் *ஜந்ம கர்ம ச மே திவ்யம் ஏவம் யோ வேத்தி தத்த்வத:। த்யக்த்வா தேஹம் புநர் ஜந்ம நைதி மாமேதி ஸோர்ஜுந!* என்று கண்ணபிரான் தானே அருளிச் செய்ததை நோக்கவேணும். 'நான் பிறந்த வாற்றையும் வளர்ந்தவாற்றையும் உள்ளபடி யாவனொருவன் அறிகின்றானோ அவன் மறுபிறப்பின்றி என்னையடைந்து நித்யாநந்த மெய்துகின்றான்' என்பது மேற்குறித்த ச்லோகத்தின் பொருள். ஆகவே நம்முடைய உஜ்ஜீவநோபாயங்களில் கண்ணபிரானுடைய திவ்ய சரிதைகளைச் சிந்தனை செய்வதே தலைமைபெற்றிருக்கும். அந்த திவ்ய சரிதங்களில் * தேனுகன் பிலம்பன் காளியனென்னுந் தீப்பப்பூடுகளடங்கவுழக்கி * என்ற பெரியாழ்வாரருளிச் செயலின்படியும் * காட்டைநாடித் தேனுகனும் களிறும்புள்ளுமுடன்மடிய வேட்டையாடி வருவான் * என்ற ஆண்டாளருளிச் செயலின்படியும் விரோதிவர்க்கங்களைக் கிழங்கெடுத்த சரிதைகளே அதிகமாயிருக்கும். கூரத்தாழ்வான் அதிமாநுஷஸ்தவத்தில் *யச் கம்ஸ முக்ய புருஷ கீட நிபர்ஹணேந தே ஸர்வ சக்தி ரதிகா நு தவ நைவ கீர்த்தி:* என்றச்லோகத்தில் 'கம்ஸன் முதலிய க்ரிமிகீடங்களை ஸர்வ சக்தனை கண்ணபிரான் நசுக்கினனென்கிறவிது அவனுக்கு ஒருபுகழோ? அல்ல; பராத்பரனான அவன் *நிவத்திலும் பசுநிரை மேய்ப்பு உவத்தி *கன்றுமேய்த்தினிதுகந்த காளாய்!* என்னும்படி ஆநிரை மேய்த்ததொன்றே சிந்தனைக்கினிது' என்றாராகிலும், அவர்தாமே அடுத்த ஸுந்தர பாஹுஸ்தவத்தில் *இப்கிநம் நிமிஷிதஞ் ச தாவகம் ரம்யம் அத்புதம் அதிப்ரியங்கரம், தேந கம்ஸமுக கீட சாஸநம் ஸுந்தராம்பகமபி ப்ரசஸ்யதே* என்றாராதலால் 'அப்பெருமான் செய்த செயல்' என்கிற காரணத்தினால் எப்படிப்பட்ட சிறுச்சேவகமும் சிந்தனைக்கு உரியதும் இனியதுமேயாமென்று கொண்டு * இமையோர் தமக்கும் நெஞ்சால் நினைப்பரிதால் வெண்ணெயூணென்னுமீனச் சொல்லே * மத்துறு கடை வெண்ணெய்களவினிலுரவிடை யாப்புண்டு எத்திறமுரலினோடிணைந் திருந்தேங்கிய வெளிவே!* என்று நவநீதசௌர்யத்திலே உள்குழைந்த ஆழ்வாரும் *ஏறுபாய்ந்தது, மாயமாவினை வாய்பிளந்தது, பேய்முலையுண்டது, சாடிறுத்தது, புள்வாய் பிளந்தது, களிறட்டது முதலியவற்றையும் பலகால்பேசி * அதுவிதுவுது வென்னலாவனவல்ல. என்னையுன் செய்கை நைவிக்கும் * என்று பேசிப் போந்தார். ஆகவே அப்பெருமான் செய்தருளின விரோதி நிரஸநச் செய்கைகளையும் விடாது அநுபவிப்போம். ... *

## தந்தைகாலில்விலங்கற வந்துதோன்றியது.

பூமிதேவிக்குத் தன்மீது ஸஜ்ஜனங்கள் எத்தனை கோடிக்கணக்காக இருந்தாலும் அவர்களைச் சுமப்பது இலவம்பஞ்சைச் சுமப்பதுபோல் வருத்தமற்றிருக்கும். ஒரு துஷ்டனுண்டாகிலும் இரும்பு மூட்டையைத் தாங்குவதுபோல் மிகவருத்தமாம் ஆதலால், த்வாபரயுகத்தில் இப்பூமியின் கண் பிறந்திருந்த கம்ஸன் சிசுபாலன் முதலிய அஸுரர்களின் பாரந்தைப் பொறுக்கமாட்டாமல் பூமிப்பிராட்டி கோரூபத்தைத் தரித்துமேருமலையினுச்சியிலுள்ள தேவர்களின் ஸபையை அடைந்து. அச்சபை நடுவில் வீற்றிருக்கும் நான்முகனை வணங்கித் தனது துயரத்தை முறையிட்டு இவ்வஸுரர்களைத் தொலைத்துத் தன்னை ஸுகப்படுத்தவேணுமென வேண்டிக்கொள்ள, அதற்கு நான்முகன் சிறிது காலம் யோசித்து இது நம்மாலாகாது; ஸர்வஜ்ஞனும் ஸர்வசக்தனும் ஸர்வலோக பிதாவாகிய ஸ்ரீமந்நாராயணனுக்கு அறிவித்து அவர் மூலமாக இக்கார்யத்தை நிறைவேற்றுவிக்கவேணும்' எனக்கருதி அந்தப் பூமியையும் மற்றுமுள்ள தேவர்களையுங் கூட்டிக்கொண்டுபோய்ப் பாற்கடலுள்பள்ளிகொள்கின்ற பரமனைத்தொழுது துதித்தனர். பின்பு திருமால் அருள் புரிந்த சிந்தைகொண்டு அவர்கட்குக் காட்சி தந்து யோகக்ஷேமங்களை விசாரித்து அவர்கள் வந்த வரலாற்றை உணர்ந்தருளி, "ஓ தேவர்களே! உங்கள் கருத்தை அறிந்துகொண்டேன். முற்காலத்தில் வருணனுடைய சாபத்தினால் கச்யபரும் அவரது மனைவியான அதிதியும் இப்பொழுது வஸுதேவ தேவகிகளாகப் பிறந்திருக்கின்றனர்; இப்பிறவியில் அவர்களுக்கு நான் பிள்ளையாகப் பிறக்கின்றேனென்று முன்பு வரமளித்திருக்கிறேன்; அங்ஙனமே நான் அவர்களுடைய கர்ப்பத்தில் தோன்றி ஸாதுபரித்ராணமும் துர்ஜநவிநாசமும் தரும ஸம்ஸ்தாபநமும் செய்யக் கடவேன்; நீங்கள் போகலாம்" என்று சோதிவாய் திறந்து அருளிச்செய்ய; அவர்கள் பரமாநந்தத்துடன் விடைபெற்றுத் தத்தம் ஸ்தானங்களை அடையலாயினர். அக்காலத்தில் மதுராநகரத்தில் யதுவம்சத்தாரில் உக்ரஸேநன் என்றொரு தார்மிகன் அரசனாயிருந்தான்; அவனது மகன் கம்ஸனென்பான். இக்கஞ்சன் துஷ்டர்களில் தலைவனாயிருந்துகொண்டு பெரியோர்கட்குத் தீமையும் புல்லியர்கட்கு நன்மையும் செய்துகொண்டு தன் பலத்தினால் தனது தந்தையாகிய உக்ரஸேநனைச் சிங்காதனத்தினின்று தள்ளிவிட்டுத் தான் அரசாண்டு வருங்காலத்து; கம்ஸன் தனது உடன் பிறந்தவளாய் யுக்தவயது வாய்ந்தவளான தேவகியை வஸுதேவருக்கு விவாஹம் செய்வித்து அவ்விவாகம் முடிந்த பின் அவளை வஸுதேவர் மாளிகையிற்கொண்டு விடுகைக்காகத் தேரேற்றிக் கொண்டு தான் தேவகியிடத்தில் மிக்க அன்பு ஆதரத்துடன் ஸாரதியாயிருந்து தேரை நடத்திக்கொண்டு வரும்போது, ஆகாயத்தில் "ஓ! அறிவுகேடனே! நீ யாரிடத்தில் அன்பு பூண்டிருக்கின்றனையோ, அத்தேவகியின் எட்டாவது கர்ப்பம் உன்னைக் கொல்லப்போகிறது" என்று அசரீரவாக்குப் பிறக்க, அதனைக்கேட்ட கம்ஸன் மிகவும் திடுக்கிட்டு, 'இனி நாம் தப்பு வழி யாது?' என்று யோசித்து, 'இத்தேவகி பிழைத்திருந்தாலன்றோ இவளது எட்டாவது பிள்ளை நம்மைக் கொல்லப் போகிறது; இப்போதே இவளைக் கொன்று விடுவோம்' என்றறுதியிட்டுக் கத்தியை உருவிக்கொண்டு தேவகியைக் கொலைசெய்யப்புக, வசுதேவர் அவனுக்குப் பல நருமங்களையும் காலகதியையும் பரக்க உபதேசிக்கவும் அவன் அதை மதியாமல் ஒரே பிடிவாதமாய் நிற்க, பின்பு வஸுதேவர் நல்லுபாயமாக "அப்பா! உனக்கு இவள்கையால்

சாவு இல்லையே; இவளுடைய பிள்ளை கையினாலல்லவோ சாவுநேரிடப்போகிறது; இவளுக்குப் பிள்ளை பிறந்தவுடன் அப்பிள்ளைகளை உன்னிடம் கொடுத்துவிடுகிறேன், நீ அவற்றைக் கொன்றுவிடு" என்று சொல்ல; கம்ஸன் அதை யுக்தமென்று கொண்டு அந்தம்பதிகளை விலங்கிட்டுச் சிறையிலடைத்திட்டான். திருமால் தேவகியிடம் எட்டாவது கர்ப்பத்தில் [ஆவணி மாதம் க்ருஷ்ணாஷ்டமி கூடிய ரோஹிணீ நக்ஷத்திரத்தில் இரவு விருஷபலக்கினத்தில்] ஸ்ரீகிஷ்ணனாய் அவதரிக்க, அப்போதே வசுதேவ தேவகிகளின் கால்விலங்கு இற்று முறிந்து விழுந்தொழிந்தது. அப்போதே வஸுதேவர் கண்ணபிரானைக்கொண்டுசென்று திருவாய்ப்பாடியில் நந்தகோபர் திருமாளிகையில் ஸுரக்ஷிதனாயிருக்கும்படி விட்டுவந்தார். .... ... *

பேய்ச்சி முலைசுவைத்துச் சகடத்தைச் சாடி மருதிறுத்தது.

ஒருத்திமகனாய்ப் பிறந்து ஓரிரவிலொருத்திமகனா யொளித்து வளர்கின்ற ஸ்ரீ கிருஷ்ண சிசுவை நாடியுணர்ந்து கொல்லும்பொருட்டுக் கஞ்சன் பல அசுரர்களை ஏவ, அவர்களில் ஒருத்தியான பூதனையென்னும் ராக்ஷஸி நல்ல பெண்ணுருவத்தோடு இரவிலே திருவாய்ப்பாடிக்குவந்து, அங்குத் தூங்கிக்கொண்டிருந்த கிருஷ்ணசிசுவை யெடுத்துத் தனது நஞ்சு தீற்றிய முலையைக் கொடுத்துக் கொல்ல முயல, பகவானாகிய குழந்தை அவ்வரக்கியின் ஸ்தனங்களைக் கைகளால் இறுகப்பிடித்துப் பாலுண்கிற பாவனையிலே அவளுயிரையும் உறிஞ்சி அவள் பேரிரைச்சலிட்டுக் கதறி உடம்பு நரம்புகளின் கட்டெல்லாம் நீங்கி விழுந்து இறக்கும்படி செய்தருளினன். .... .... ... நந்தகோப கிருஹத்தில் ஒரு வண்டியின் கீழ்புறத்திலே கண்ணனைத் தொட்டிலிலிட்டுக் கண்வளர்த்தி யசோதை யமுனை நீராடப்போனாள். கம்ஸனால் ஏவப்பட்ட அசுரனொருவன் அச்சகடத்தில் வந்து ஆவேசித்து ஸ்ரீ கிருஷ்ண சிசுவின்மேலே விழுந்து கொல்லமுயன்றதை அறிந்த அப்பகவான், பாலுக்கு அழுகின்றபாவனையிலே தன் சிறிய திருவடிகளை மேலே தூக்கி உதைத்தருள, அவ்வுதைபட்ட மாத்திரத்தில் அச்சகடு திருப்பப்பட்டுக் கீழேவிழுந்து அசுரனுட்பட அழிந்தது. .... .... ....

குழந்தைப் பருவமுள்ள கண்ணன் துன்பப்படுத்துகின்ற பல விளையாடல்களைச் செய்யக்கண்டு கோபித்த யசோதை கிருஷ்ணனைத் திருவயிற்றிற் கயிற்றினாற் கட்டி ஓருரலிலே பிணித்து விட, கண்ணன் அவ்வுரலை இழுத்துக் கொண்டு தவழ்ந்து அங்கிருந்த இரட்டை மருதமர [யமளார்ஜுன]த்தின் நடுவே எழுந்தருளியபொழுது அவ்வுரல் குறுக்காய் நின்று இழுக்கப்பட்டபடியினாலே அம்மரங்களிரண்டும் முறிந்து விழுந்தவளவில், முன் நாரதர் சாபத்தால் அம்மரங்களாய்க்கிடந்த நளகூபரன் மணிக்ரீவன் என்னும் குபேர புத்திரர் இருவரும் சாபந்தீர்ந்து சென்றனர். .... *

கண்ணன்வாயிலில் வையமேழுங்கண்டது.

ஒருநாள் கண்ணன் வீதியில் விளையாடிக்கொண்டிருக்கையில் பலராமன் வந்து 'அம்மா! கிருஷ்ணன் மண்ணைத்தின்கின்றான்' என்று சொல்லக்கேட்ட யசோதை ஓடிப்போய்க் கண்ணனை வாரி யெடுத்துக்கொண்டு உள்ளே வந்து ஏன் மண்ணைத்தின்றாய்? என்று வெருட்ட, அதற்குக்கண்ணன் 'அம்மா நான் மண்ணைத் தின்னவில்லை; பலராமன் என்மேல் வீணாகக் கோள் சொல்லுகிறான். வேணுமாகில் என் வாயைப் பார்' என்று தன் வாயைத்திறந்து காட்ட, யசோதை அவ்வாய் வழியாக அவனுடைய திருவயிற்றில் ஏழு குலபர்வதங்களையும் கடல்களையும்

ஏழு தீவுகளையுமுடைய இப்பூமி முழுவதையுங்கண்டு "இவன் ஆயர் புத்திரனல்லன் அருந்தெய்வம்" என்று நிர்ணயித்துப் பின்னையும் சிறிதுநேரத்தில் அந்த புத்தி மாறித் தன்னுடைய பாலனாகவே யெண்ணிக் கண்ணனை யெடுத்து முத்தமிட்டாள். *ஐய நாவழித்தாளுக்கு அங்காந்திட வையமேழும் பிள்ளைவாயுள் கண்டதுமுண்டு.

## காளியனுச்சியில் நட்டம்பாய்ந்தது.

இப்படி யிருக்கையில் ஒருநாள் கிருஷ்ணன் கன்றுகளை ஒருவரும் ஸஞ்சரியாத வழியே போக்கத்தொடங்க, மற்ற இடைப்பிள்ளைகள் அழைத்து 'கிருஷ்ணா! அவ்வழி நோக்கவேண்டா; அவ்வழியிற் சென்றால், யமுநாநதியில் ஓர்மடுவில் இருந்து கொண்டு அம்மடு முழுவதையும் தன் விஷாக்நியினாற் கொதிப்படைந்த நீருள்ள தாய்ப் பானத்துக்கு அநர்ஹமாம்படிசெய்த காளியனென்னும்கொடிய ஐந்தலை நாகம் குடும்பத்தோடும் வாஸஞ்செய்துகொண்டு அணுகினவர்களனைவரையும் பிணமாக்கி விடுதலால் நாங்கள் அஞ்சுகின்றோம்' என்ன; அதைக்கேட்ட கண்ண பிரான் உடனே அக்காளிய நாகத்தைத் தண்டிக்கவேண்டுமென்ற திருவுள்ளங் கொண்டு அம்மடுவிற்குச் சமீபத்திலுள்ளதொரு கடம்பமரத்தின் மேலேறி அம்மடு விற் குதித்து, கொடிய அந்நாகத்தின் படங்களின்மேல் ஏறித் துவைத்து நர்த்தனஞ் செய்து நசுக்கி வலியடக்குகையில், மாங்கலிய பிக்ஷை இட்டருளவேண்டுமென்று தன்னை வணங்கிப்பிரார்த்தித்த நாககன்னிகைகளின் விண்ணப்பத்தின்படி அந்தக் காளியனை உயிரோடு கடலிற்சென்று வாழும்படி விட்டருளினன். ... *

## தேனுக, அரிஷ்டநேமி, பகாசுர பங்கங்கள்

ஒருநாள் கண்ணபிரான், பலராமனோடும் ஆயர் சிறுவர்களோடும் ஆநிரை மேய்த்துக்கொண்டு பழங்கள் அழகாக மிகுதியாய்ப் பழுத்து வாஸனை வீசிக்கொண்டிருந்த ஒரு பனங்காட்டையடைந்து அப்பனம்பழங்களை விரும்பி உதிர்த்துக் கொண்டு வருகையில், அவ்வனத்துக்குத் தலைவனும் கம்ஸன் பரிவாரத்தில் ஒருவனுமாகிய கழுதை வடிவங்கொண்ட தேநுகாஸுரன் கோபமூண்டு ஓடிவந்து எதிர்த்துப் போர்செய்ய, உடனே கண்ணன் அதிலாகவமாய்ப் பின்னங்காலிரண்டையும் பற்றி அவ்வசுரக் கழுதையைச் சுழற்றி உயிரிழக்கும்படி பனைமரத்தின்மேல் எறிந்து அழித்து, பிறகு எல்லாருமாய் அங்குள்ள இனிய கனிகளை அருந்திப் பொழுதுபோன வாறே வீடுபோய்ச் சேர்ந்தனர். ... ... ... ஒருநாள் கம்ஸனாலேவப்பட்ட அசுரர்களில் அரிஷ்டனென்பவன் எருது வடிவங்கொண்டு பசுக்களையெல்லாம் முட்டி இடைச்சேரியைப் பயப்படுத்திக்கொண்டு ஸ்ரீ கிருஷ்ணனது திருவயிற்றின் மேற் கண்வைத்துக் கொம்புகளை நீட்டிப் பாய்ந்துவர, கண்ணபிரான் அவனைக் கொம்பு களிற்பிடித்து அசையவொட்டாமற் செய்து தன்காலினால் அவனது வயிற்றிலே ஓரிடி இடித்து அவன் கழுத்தைப் பிடித்துக் கசக்கி அவனுடைய கொம்பு களில் ஒன்றைப் பறித்து அதனாலேயே அவனை அடித்துக் கொன்றனன். ஒருநாள் பகன் என்னும் ஓரஸுரன் கொக்குவடிவங்கொண்டு கண்ணபிரானைக் கொல்வதாக நெருங்கிவர, அப்பொழுது கண்ணன் அப்பறவையின் வாயலகுகளை இருகையாலும் பிடித்துக்கிழித்து அதனை அழித்தனன். .... .... *

### குருந்தொசித்ததும் கன்றினால் விளவெறிந்ததும், ஆன்றொடுத்ததும் கோவிந்தனார்க்கு.

ஒருநாள் வேறொரு அஸுரன், கண்ணபிரான் மலர்கொய்வதற்பொருட்டு விரும்பியேறும் குருந்தமரத்திற் பிரவேசித்து அப்பெருமான் வந்து தன்மீது ஏறும்போது தான் முறிந்துவிழ்ந்து அவனை விழ்த்திக்கொல்லக் கருதியபோது, மாயவனை கண்ணபிரான் அம்மரத்தைக் கைகளாற் பிடித்துத் தன்வலிமை கொண்டு முறித்து அழித்தனன். கம்ஸனாலேவப்பட்ட அசுரர்களில் கபித்தாசுரன் விளாமரத்தின் வடிவமாய், கண்ணன் தன்கீழ் வரும்பொழுது மேல்விழுந்து கொல்வதாக எண்ணிவந்து நிற்க, அதனையறிந்து கிருஷ்ணபகவான் அவ்வாறே தன்னை முட்டிக் கொல்லும்பொருட்டுக் கன்றின் வடிவங்கொண்டு வந்த வத்ஸாஸுரனைப் பின்னிரண்டு கால்களையும் பிடித்து எடுத்துச் சுழற்றி விளாமரத்தின்மேல் எறிய, இருவரும் சிதைந்து தமது அசுரவடிவத்துடனே விழுந்து இறந்தன. இதுமுள்ளைக் கொண்டே முள்ளைக் களைவது போலாம். ... ... ... ... *

கண்ணபிரானுடைய அதிமாநுஷ சேஷ்டித வேஷங்களைக் கண்டு ஆயர்களனைவரும் ' இவனே நம் குலக்கொழுந்து, இவன் கட்டளைப்படியே நாம் ஒழுக வேண்டும்' என்று அறுதியிட்டனர். இங்ஙனமிருக்கையில் சரத்ருது வந்தது. அப்போது இடையர்கள் வருஷந்தோறும் நடத்துவதுபோல் வழக்கப்படி இந்திரனுக்குப் பூஜைசெய்யப் பற்பல வண்டிகளில் சோறும் தயிரும் நெய்யும் காய்கறிகளும் மற்றுமுள்ள பூஜாத்ரவ்யங்களுமாகிய இவைகளைச் சேகரிப்பதைக் கண்டு கிருஷ்ணன் 'பெரியோர்களே ! நாமும் நம்முடைய பசுக்களும் எதனால் ஜீவிக்கிறோமோ அதற்கே பூஜைசெய்வது தகுதி; இக்கோவர்த்தனகிரியே பசுக்களுக்குப் புல்லும் தண்ணீரும் கொடுத்துக் காப்பாற்றுகின்றது ; இந்திரனால் நமக்கு என்ன பயனுண்டு? ஒன்று மில்லை. ஆகையால் நீங்கள் இப்பூசையனைத்தையும் இம்மலைக்கே இடுங்கள் ' என்ன, இடையர்கள் இதைக்கேட்டு அங்ஙனமே செய்ய, கண்ணபிரான் தானே ஒரு தேவதையின் ரூபங்கொண்டு அவற்றை முற்றும் அமுதுசெய்தருள, அவ்விந்திரன் கோபத்தோடு புஷ்கலாவர்த்தம் முதலிய பல மேகங்களை ஏவி, கண்ணன் விரும்பி மேய்க்கிற கன்றுகளுக்கும் பசுக்களுக்கும் கண்ணனுக்கு இஷ்டரான இடையர்களுக்கும் இடைச்சியர்க்கும் தீங்கு தரும்படி கல் மழையை ஏழு நாள் இடைவிடாது பெய்வித்தபொழுது, கண்ணன் கோவர்த்தநமலையை யெடுத்துக் குடையாகப் பிடித்து மழையைத் தடுத்து எல்லாவுயிர்களையும் காத்தருளினன். .... ... *

### ஆய்ச்சியரது துகில்களையும் வளைகளையுங் கொண்டதும் குரவைகோத்ததும் குடக்கூத்தாடினதும்.

திருவாய்ப்பாடியிலுள்ள கோபஸ்த்ரீகள் கண்ணபிரானிடங்கொண்ட வேட்கை மிகுதியினால் அவன் தம்மிடம் காதல் விஞ்சுமாறு நோன்புநோற்று அந்நோன்பின் முடிவில் யமுனைநதியிலே நீராட அப்போது அவர்கள் இடைச்சாதியொழுக்கத்தின்படி கரையில் அவிழ்த்து வைத்துவிட்டுப்போன ஆடைகளையெல்லாம் கண்ணன் ரஹஸ்யமாகவந்து எடுத்துக்கொண்டு அருகிலிருந்ததொரு மரத்தின் மேலேறியிருந்து சிறிதுபோது அவர்களை அலைக்கழித்துப்பின்பு அவர்கள் கைகூப்பி வணங்கி மிகவும் கெஞ்சிக் கேட்டுக்கொண்டதனால் அவர்களுக்கு அத்துகில்களை

அளித்தருளினன் ... .... மற்ருெருகால், கண்ணபிரான் தன்னிடத்து விருப்பமுற்ற ஆயர்மாதருடைய ஆவலைத் தீர்க்கக் கருதி சரத்காலத்தில் ஓரிரவில் யமுனைக்கரையில் நின்று வேணுநாதம் செய்ய, அதனைக்கேட்ட இடைப்பெண்களெல்லாரும் மாமியார் மாமனுர் முதலியோரையும் மதியாமல் காவல் கடந்து புறப்பட்டுச் சென்று க்ருஷ்ண கோஷ்டியில் அந்வயிக்க, அன்றிரவு அவர்களுடன் பரமபோக்யமாகக் குரவைக் கூத்தாடினன். [குரவையாவது-ஒவ்வொருஆய்ச்சியின் பக்கத்தில் ஒவ்வொரு கண்ணனுகப் பலவடிவெடுத்து நின்று மண்டலித்தாடும் ராஸக்ரீடை.] அப்பொழுது கோபிமார்கள் பரமாநந்தத்தின் எல்லையிலே நிற்பதைக்கண்ட கண்ணபிரான் 'இது வெள்ளக்கேடாகவொண்ணுது; இந்த ரஸத்தை மாற்றவேணும்' என நினைந்து அவ்வாயர்மங்கையரை விட்டுப் பிரிந்துபோய் ஒளிக்க, கோபிகள் கண்ணனைத் தேடிக் காணுமல் காதல் மீதூர்ந்து அப்பிரானைக் காணுமளவும் தாங்கள் உயிர்தரித்திருக்கைக்காக, ஒருத்தி க்ருஷ்ணனுகவும் மற்ருெருத்தி காளியனுகவும் வேருெருத்தி வேருென்ருகவும் பாவனைகள் செய்துகொண்டு கிருஷ்ணனுடைய செயல்களையெல்லாம் அநுகரித்துத் தரித்திருக்கையில்; "தாஸாமாவிரபூத் சௌரி: ஸ்மயமாநமுகாம்புஜ:—பீதாம்பரதரஸ் ஸ்ரக்வீ ஸாக்ஷாத் மந்மதமந்மத:' என்றபடி—புன்முறுவல்செய்து பீதகவாடை யுடுத்துப் பரமவிலக்ஷணமான திருக்கோலத்துடனே எழுந்தருளி அவர்களுக்கு ஸேவைஸாதித்து அப்பொழுதே அவர்களது தாபமெல்லாம் ஆறும்படி பலவித லீலைகளைச் செய்து ஆநந்தப் படுத்தினன் ... க்ருஷ்ண லீலைகளில் குடக்கூத்தாடினது மிகச் சிறப்புற்றது. குடக்கூத்து—ப்ராஹ்மணர்க்குச் செல்வம் விஞ்சினல் யாகஞ்செய்வதுபோல, இடையர்க்குச் செல்வம் விஞ்சினல் அதனுலுண்டாகுஞ் செருக்குக்குப் போக்குவீடாக அவர்களாடுவதொரு கூத்து; இதனை, தலையிலே அடுக்குக் குடமிருக்க இரு தோள்களிலும் இரு குடங்களிருக்க இரு கையிலும் குடங்களையேந்தி ஆகாசத்திலே யெறிந்து ஆடுவதொரு கூத்து—என்பர்'

**சீமாலிகனேடு தோழமை கொண்டு சக்ரத்தால் தலைகொண்டது.**

திருவாய்ப்பாடியில் மாலிகனென்பானெருவன் கண்ணபிரானுக்கு உயிர்த் தோழனுய் அப்பிரானிடத்தில் பலவகையாயுதங்களையும் பயின்று ஒருவர்க்கு மஞ்சாமல் அஹங்காரியாய் ஸாது ஜனங்களை நலிந்துகொண்டு இதுவே போதுபோக்காக விருந்தான். அதனுல் கண்ணபிரானுக்கு அவனை வதஞ் செய்து விடவும் எண்ணமுண்டாயிற்று. ஆனுலும் 'நண்பனுகிய இவனை நாம் கொல்வது தகாது, என்ன செய்யலாம்' என்கிற ஆலோசனை யுண்டாயிற்று. ஒருபாயம் தோன்றி; ஒரு நாள் அவனை நோக்கி 'நீ இப்படி அஹங்காரியாய் ஸாது ஜனங்களை நலியா நிற்பது தகுதியன்று' என்ன, ஆஸுரப்ரக்ருதியான அந்த மாலிகன் தன் வாயில் வந்தபடி பிதற்றி, 'நீ எல்லா ஆயுதங்களையும் எனக்குக் கற்பித்தும் சக்ராயுதப் பயிற்சி மட்டும் செய்விக்கவில்லையே' என்று கண்ணபிரான் மேற் குறைகூற 'இதில் பழகுவது உனக்கு முடியாது, எனக்கே அஸாதாரணமானது' என்று கண்ணன் கூற 'என்னல் முடியாதது மொன்றுண்டோ? நீ அவசியம் அதைக் கற்பிக்கவேணும்' என்று அவன் நிர்ப்பந்திக்க, கண்ணன் இதுதான் தக்க ஸமயமென்று திருவுள்ளத்திற்கொண்டு சக்ராயுதத்தை யெடுத்துத் தன் ஒற்றை விரலால் சுழற்றி மேலேயெறிந்து கையிலேற்க, 'இது எனக்கு அரிதோ?' என்று மாலிகன் சொல்ல 'இது உனக்கு அரிதேகிடாய்' என்று கண்ணன் கூறவும் அதை அவன் கேளாமல்

அச்சக்ராயுதத்தை வாயிலே கழற்றி யெறிந்து பிடிப்பதாக நினைத்துத் தன் கையிலுள்ள கழுத்துக்கு அறிந்து வைத்து நிற்க, அச்சக்கரம் சுழன்று வருவதற்கு இடம் போதாமையாலே அதன் வீச்சு இவன் கையில் பிடிபடாமல் இவன் தலையை அரிந்துகொண்டு போயிற்று. இக்கதையைப் பெரியாழ்வாரொருவரே தமது திருமொழியில் (2—7—8) "சீமாலிக னவனோடு தோழமைக் கொள்ளவும் வல்லாய், சாமாறவனை நீ யெண்ணிச் சக்கரத்தால் தலைகொண்டாய்" என்றநுஸந்தித்தருளினர். இப்படி தோழனைச் சாமா றெண்ணினது தகுமோ வென்கிற சங்கைக்குப் பரிஹாரமாக "ஆமாறு அறியும் பிரானே!" என்று எம்பெருமானை விளித்தார் ... *

### பக்த விலோசனத்து மஹர்ஷி மனைவிகளின் கதை

ஒரு நாள் கண்ணபிரானும் பலராமனும் பசுக்களுடனும் இடையர்களுடனும் யமுனையாற்றின் கரையிலே சென்று நெடும்போது பசுக்களை மேய்த்துக் களைத்து அற்றங்கரையில் ஓரிடத்திலே உட்கார்ந்த வளவில், இடைப்பிள்ளைகளெல்லாரும் க்ருஷ்ண பலராமர்களை நோக்கித் தங்களுடைய பசியின் கொடுமையைக் கூறி 'இப்போதே நீங்கள் இப்பசியைப் போக்கி யருளவேணும்' என்று மிக்க ஆர்த்தியுடன் ப்ரார்த்திக்க, அவர்களுடைய பரிதாபத்தை யறிந்த கண்ணபிரான், 'ஓ பிள்ளைகளே! சமீபத்தில் சில மஹர்ஷிகள் ஆங்கிரஸ மென்னும் வேள்வியை அநுஷ்டித்துக்கொண்டிருக்கிறார்கள்; நீங்கள் அவர்களிடம் போய் என் பெயரையும் என் தமையனார் பெயரையும் சொல்லி, இன்னாரால் நாங்கள் அனுப்பப்பட்டிருக்கின்றோமென்று கூறி அன்னம் விரும்புங்கள்; புசிநீரும்' என்று கட்டளையிட்டனுப்பினான்; அவர்களும் அங்ஙனமே அவ்விடஞ்சென்று விநயத்துடன் இவ்வண்ணம் விண்ணப்பஞ்செய்து அடிசில் வேண்ட, அவ்வந்தணர்கள் இவ்வாயர் பிள்ளைகளின் பேச்சைச் செவிகொடுத்துங் கேளாதொழியவே ஆய்ப்பிள்ளைகள் க்ருஷ்ண பலராமர்களிடம் மீண்டு வந்து செய்தியைச்சொல்ல, இதுகேட்ட கண்ணபிரான் புன்முறுவல் செய்து, 'பிள்ளைகாள்! அந்த மஹர்ஷிகளுடைய தர்ம பத்னிகள் இருக்கிறார்களே, அவர்களிடஞ் சென்று நானும் பலராமனும் இங்கே இருப்பதாகச் சொல்லி ப்ரஸாதம் கேளுங்கள்; அப்பெண்டிர் தவறாது தந்திடுவர்கள்' என்று சொல்லி அவர்களை ரிஷிபத்னிகளிடமனுப்ப, உடனே அவர்கள் அவ்விடஞ் சென்று அந்த ரிஷிபத்னிகளை நமஸ்கரித்து 'அம்மனைமீர்! இதோ ஸமீபத்தில் கண்ணபிரானும் நம்பி மூத்த பிரானும் பசுக்களை மேய்த்துக் களைத்திருக்கின்றனர்; அவர்களோடு அநுசரர்களாக வந்த அஸ்மதாதிகளும் களைத்திருக்கின்றோம்; எல்லாரும் பசி தீர்ந்து மகிழும்படி ப்ரஸாதம் தரவேணும்' என வேண்ட; அப்பெண்டிர்கள் ஸ்ரீக்ருஷ்ண நாம ச்ரவணமாத்ரத்திலே பரமாநந்தமடைந்து உடம்பு மயிர்க்கூச்செறிந்து உடனே பக்ஷ்யம், போஜ்யம், லேஹ்யம், சோஷ்யம் என நான்கு வகைப்பட்ட அன்னவர்க்கங்களையும் நல்ல பாத்திரங்களிலெடுத்துக்கொண்டு ஸ்ரீ க்ருஷ்ண பலராமர்களிருக்குமிடத்தை நோக்கிப் புறப்படுகையில், தந்தையர் தாய்மார் மக்கள் உடன் பிறந்தார் பர்த்தாக்கள் முதலானோர் எவ்வளவு தடுத்தும் அவர்களுடைய தடைக்கு உடன்படாதாராய் நிலைநின்ற பக்தி நிஷ்டையை யுடையவர்களாய் விரைந்து வந்து யமுனையாற்றங்கரைச் சோலையிலே நம்பி மூத்த பிரானையும் கண்ணபிரானையும் ஸேவித்து, கொணர்ந்த அன்னவர்க்கங்களை ஸமர்ப்பித்துவிட்டுப் பரமாநந்த பூரிதர்களாய்

மீண்டு சென்றனர்; அவ்வடிசிலைக் கண்ணபிரான் அவ்வாயர் பிள்ளைகளுக்குத் தந்து தானும் அமுது செய்தான்—என்ற வரலாறு ஸ்ரீபாகவதத்தில் தசமஸ்கந்தத்தில் இருபத்து மூன்றுமத்யாயத்தில் விரிவாகக் காணத்தக்கது. ரிஷிபத்னிகள் இவ்வண்ணமாக அடிசில் கொணர்ந்து கொடுத்தது ஒரு நாளேயல்ல! நாடோறும் கண்ணபிரான் யமுனையாற்றங்கரைச் சோலைகளிலே வந்து ஆநிரை மேய்த்துக் களைத்துப் போகிறானென்றுணர்ந்து அப்பெண்டிர் நெடுநாள் வரையில் நாடோறும் பகலில் உச்சி வேளையில் கொணர்ந்து கொடுத்துக்கொண்டிருந்தார்களென்றும், ஒவ்வொரு நாளும் அவர்கள் அடிசில் கொணரும் ஸமயத்துக்குச் சரியாகக் கண்ண பிரானும் களைப்புடன் அவ்வடிசிலை எதிர்பார்த்து அத்திக்கையே நோக்கியிருப்பா னென்றும் ஆண்டாள் பாசுரத்தினாலறியலாகிறது. அப்பாசுரம் நாச்சியார் திரு மொழி. (12.6) * வேர்த்துப் பசித்து வயிறசைந்து வேண்டடிசிலுண்ணும்போது, ஈதென்று பார்த்திருந்து நெடுநோக்குக் கொள்ளும் பத்தவிலோசனத்துய்த்திடுமின் * என்பதாம்.

## பிலம்பன் தன்னைப் பாண்டிவடத்தில் வென்றது.

யமுனையாற்றங்கரையில் பாண்டீரவடமென்று பெரியதோராலமரம். அதனைப் பாண்டிவடமென்றாள் ஆண்டாள். நாச்சியார் திருமொழியில் (12 7.) *பிலம்பன் தன்னைப் பண்ணழியப் பலதேவன் வென்ற பாண்டிவடத்தென்னை யுய்த்திடுமின்* என்ற பாசுரம் காண்க. கம்ஸன் கண்ணனை நலியுமாறு ஏவின பல அசுரர்களில் ப்ரலம்பாஸுரனென்பவனு மொருவன். இவன் திருவாய்ப்பாடியில் வந்து நீங்கு செய்ய கண்ணனும் பலராமனும் இவனை விளையாட்டாகத் தள்ளிக்கொண்டுபோய்ப் பாண்டிவடத்தருகில் சேர்த்துப் பலராமன் கொன்றிட்டனன். இச்சரிதையைப் பெரியாழ்வாரும் ஆண்டாளுமே அநுசந்தித்தனர். பெரியாழ்வார் தமது திருமொழி யில் (3-6-4.) *தேனுகன் பிலம்பன் காளியனென்னுந் தீப்பப்பூடுகளடங்கவுழக்கி என்ற பாசுரத்தினால் அந்த ப்ரலம்பாஸுரவதத்தை ஸ்ரீக்ருஷ்ண சேஷ்டிதங்களி லொன்றாகவே யநுஸந்தித்தார். ஆண்டாள் அங்ஙனன்றிக்கே "பிலம்பன் தன்னைப் பண்ணழியப் பலதேவன் வென்ற" என்று புராணரீதி வழுவாது பலராம க்ருத்ய மாகவே பேசினள். பெரியாழ்வார் இதனை ஸ்ரீக்ருஷ்ண சேஷ்டிதமாகக் கூறினது தவறுதானேயென்ன வேண்டா; ஸ்ரீ ராமாயணத்தில் சூர்ப்பணகாபங்கம் செய்தது இளைய பெருமாளாயிருக்கவும் அதனைப் பெருமாளுடைய செயலாகவே ஆழ்வார்க ளநுஸந்தித்ததோடொக்குமிது. ... *

## ஏழ்விடை செற்றுப் பின்னைதோள் புணர்ந்தது.

கும்பனென்னும் இடையர் தலைவனது மகளாய் நீளாதேவியின் அம்சமாகப் பிறந்ததனால் நீளா என்ற பெயரால் வழங்கப்பட்டு வருபவளான நப்பின்னைப் பிராட்டியை மணஞ்செய்து கொள்ளுதற்காக அவள் தந்தை வீர்யசுல்கமாகக் குறித்தபடி யாவருக்கும் அடங்காத அஸுராவேசம் பெற்ற ஏழு எருதுகளையுங் கண்ணபிரான் ஏழு திருவுருக்கொண்டு சென்று வலியடக்கி அப் பிராட்டியை மணஞ் செய்துகொண்டனன். [இதைப்பற்றித் தனி விவரணம் காண்க.] .... ....

## மாவாய் பிளந்தது (கேசி வதம்)

ஒருநாள் கம்ஸனாலேவப்பட்ட கேசி என்பானோர் அஸுரன் குதிரையினுருவத்தோடு ஆயர்கள் அஞ்சி நடுங்கும்படி கனைத்துத் துரத்திக்கொண்டு கண்ணபிரான் மேற் பாய்ந்து வர, அப்பெருமான் தன் திருக்கையை நன்றாகப் பெருக்கி நீட்டி அதன் வாயிற் கொடுத்துத் தாக்கிப் பற்களை யுதிர்த்து உதட்டைப் பிளந்து அதனுடம்பையும் இரு பிளவாக வகிர்ந்து தள்ளினான். [திருவாய்ப்பாடி நிகழ்ச்சிகள் முடிந்தன.]

## வடமதுரையில் கூனி கூன் நிமிர்ந்தது.

கம்ஸனால் வில்விழவுக் கென்று அக்ரூரரையிட்டு அழைக்கப்பட்ட கண்ணபிரான் பலராமனோடு வடமதுரை யெழுந்தருளும்போது ராஜவீதியில் சந்தனக் கிண்ணத்தைக் கையிலேந்தி வருகிற மங்கைப் பருவமுடைய ஒரு கூனியைக்கண்டு 'நங்காய்! யாருக்கு நீ இந்தப் பூச்சுக் கொண்டு போகிறாய்?' என்று விலாஸத்தோடு கேட்டருள, அந்தக் கூனி இவ்வாறு காதலுடையவன்போலக் கண்ணன் அருளிச்செய்தது கேட்டு அவனது திருக்குணங்களினாலே மனமிழுக்கப்பட்டவளாய் "அழகனே! நான் நைகவக்கிரை யென்பவளென்றும் கம்ஸனாலே சந்தநாதிப் பூச்சுகள் ஸித்தஞ் செய்யும் வேலையில் வைக்கப்பட்டவளென்றும் நீ அறியாயோ?" என்ன; கண்ணன் 'எங்கள் திருமேனிக்கு ஏற்ற வெகு நேர்த்தியான இந்தப் பூச்சை எங்கட்குக் கொடுக்கவேண்டும்' என்று சொன்னவுடனே, அவள் 'அப்படியே திருவுள்ளம் பற்றுங்கள்' என்று மிக்க அன்போடு ஸமர்ப்பிக்க, அப்பூச்சைத் திருமேனியில் அணிந்து ஸ்ரீ கிருஷ்ணன் இவளிடத்தில் மிகவும் ப்ரஸந்நனாய், நடுவிரலும் அதன் முன்விரலுங் கொண்ட நுனிக்கையினாலே அவளை மோவாய்க்கட்டையைப் பிடித்துத் தன் திருவடிகளினால் அவள் கால்களை அமுக்கி இழுத்துத் தூக்கிக் கோணல் நிமிர்த்து அவளை மகளிரிற்சிறந்த உருவினளாக்கி யருளினன். ... ... ...

## கம்ஸனது வில்லை முறித்துக் குவலயாபீட யானையைக்கொன்று மல்லர்களை முடித்துக் கஞ்சனைக் கொன்றது.

வடமதுரையில் கம்ஸனுடைய படைச்சாலையை விசாரித்து அங்குச் சென்று அவனது வில்லை யெடுத்து முறித்தெறிந்து கம்ஸனது அரண்மனையை நோக்கிச் செல்லுகையில் வழியில் தம்மைக் கொல்லும்படி அவனால் ஏவி நிறுத்தப்பட்ட குவலயாபீட மென்னும் மதயானை கோபித்துவர, அவ்யாதவவீரர் அதனை எதிர்த்து அதன் தந்தங்களிரண்டையும் சேற்றிலிருந்து கொடியை எடுப்பதுபோல எளிதிற் பறித்து அவற்றையே ஆயுதமாகக்கொண்டு அவற்றால் அடித்து அவ்யானையை உயிர் தொலைத்துவிட்டு உள்ளே செல்லுகையில், அவர்களை எதிர்த்துப் பொருது கொல்லும்படி கம்ஸனால் ஏவப்பட்ட சாணூரன் முஷ்டிகன் முதலிய பெருமல்லர்கள் சிலர் வந்து எதிர்த்து உக்ரமாகப் பெரும்போர் செய்ய, அவர்களை யெல்லாம் அவ்யாதவ வீரர் இருவரும் மற்போரினாலேயே கொன்றுவென்றிட்டுப் பிறகு மஞ்சத்தின்மீது வீற்றிருந்த கம்ஸன்மேல் வேகமாக எழும்பி அவனது கிரீடம் கழன்று கீழே விழும்படி அவனைத் தலைமயிர்ப்பிடித்துத் தரையில் தள்ளி அவன்மேல் தான் விழுந்து அவனைக் கொன்றிட்டனன் கண்ணபிரான். ... ... ...

பௌண்ட்ரகவாஸுதேவனைப் பரிகஸித்தது.

பௌண்ட்ரகவாஸுதேவன் என்பானொரு அரசன் பிறந்திருந்தான்; பல மூடர்கள் திரண்டு 'நீதான் வாஸுதேவன்' என்று அவனைப் புகழ்ந்து கொண்டிருந்தார்கள். அதனால் அவனும் 'நானே வாஸுதேவன்' என்று மயங்கி மார்பு நெறித்துச் சங்கு சக்கரம் கிரீடம் முதலியவற்றைச் செய்வித்துத் தானணிந்துகொண்டு, தூதனை யழைத்து "நீ கிருஷ்ணனிடம் போய் என் பெயரைச் சொல்லி இன்னான் வாஸுதேவனாயிருக்க, நீ அவனுடைய சங்கு சக்கரங்களைத் தரிக்கக்கூடாது! இன்று முதல் விட்டுவிடவேண்டியது; இல்லையாகில் அவனோடு யுத்தஞ்செய்து அவனை வென்றாயாகில் தரிக்கலாம்' என்று சொல்ல வேண்டியது" என்று சொல்லியனுப்ப, அங்ஙனமே அந்தத் தூதன் வந்து கிருஷ்ணனிடம் அச்செய்தியைச் சொல்ல, கண்ண பிரான் சினமுற்றுப் பெரிய திருவடியின்மீதேறிச் சென்று போர் செய்து அப்பௌண்ட்ரகனைத் தனது திருவாழியினால் தலையறுத்துக் கொன்றொழிந்தனன் ... *

வாணன் தோள்களைத் துணித்து வரமருள்புரிந்தது.

பலிசக்ரவர்த்தியின் ஸந்ததியிற்பிறந்த பாணாஸுரனுடைய பெண்ணாகிய உஷையென்பவள், ஒருநாள் ஒரு புருஷனோடு தான் கூடியிருந்ததாகக் கனாக்கண்டு, முன் பார்வதி அருளியிருந்தபடி அவனிடத்தில் மிகுந்த ஆசைபற்றியவளாய், தன் உயிர்த்தோழியான சித்ரலேகைக்கு அச்செய்தியைத் தெரிவித்து, அவள்மூலமாய் அந்தப்புருஷன் க்ருஷ்ணனுடைய பௌத்திரனும் ப்ரத்யும்நனது புத்திரனுமாகிய அநிருத்தனென்று அறிந்துகொண்டு 'அவனைப் பெறுவதற்கு உபாயஞ்செய்ய வேண்டும்' என்று அத்தோழியையே வேண்ட, அவள் தன் யோகவித்தை மஹிமையினால் துவாரகைக்குச் சென்று அநிருத்தனைத் தூக்கிக்கொண்டு வந்து அந்தப்புரத்திலே விட, உஷை அவனோடு போகங்களை அநுபவித்து வர, இச்செய்தியைக் காவலாளராலறிந்த அந்தப் பாணன் தன் சேனையுடன் அநிருத்தனை யெதிர்த்து மாயையினாலே பொருது நாகாஸ்திரத்தினாற் கட்டிப்போட்டிருக்க, துவாரகையிலே அநிருத்தனைக் காணாமல் யாதவர்களெல்லாருங் கலங்கியிருந்தபோது, நாரதமுனிவனால் நடந்த வரலாறு சொல்லப்பெற்ற ஸ்ரீ க்ருஷ்ணபகவான், பெரிய திருவடியை நினைத்தருளி உடனே வந்து நின்ற அக்கருடாழ்வானது தோள்மேலேறிக்கொண்டு பலராமன் முதலானோரோடுங்கூடப் பாணபுரமாகிய சோணிதபுரத்துக்கு எழுந்தருளும்போதே, அப்பட்டணத்தின் ஸமீபத்திற் காவல்காத்துக்கொண்டிருந்த சிவபிரானது பிரமதகணங்கள் எதிர்த்துவர, அவர்களையெல்லாம் அழித்து, பின்பு சிவபெருமானால் ஏவப்பட்டதொரு ஜ்வரதேவதை மூன்று கால்களும் மூன்று தலைகளுமுள்ளதாய் வந்து பாணனைக் காப்பாற்றும் பொருட்டுத் தன்னோடு யுத்தஞ்செய்ய, தானும் ஒரு ஜ்வரத்தை உண்டாக்கி, அதன் சக்தியினாலே அதனைத் துரத்திவிட்ட பின்பு, சிவபிரானது அநுஜ்ஞையால் பாணாஸுரனது கோட்டையைச் சூழ்ந்து கொண்டு காத்திருந்த அக்நிதேவர் ஐவரும் தன்னோடு எதிர்த்துவர, அவர்களையும் நாசஞ்செய்து, பாணாஸுரனோடு போர் செய்யத் தொடங்க, அவனுக்குப் பக்கபலமாகச் சிவபெருமானும் ஸுப்ரஹ்மண்யன் முதலான பரிவாரங்களுடன் வந்து எதிர்த்துப் போராட, கண்ணன் தான் ஜ்ரும்பணாஸ்திரத்தைப் பிரயோகித்துச் சிவனை ஒன்றுஞ் செய்யாமற் கொட்டாவிவிட்டுக்கொண்டு சோர்வடைந்துபோம்படி

செய்து, ஸுப்ரஹ்மண்யனையும் கணபதியையும் உங்காரங்களால் ஒறுத்து ஓட்டி, பின்னர் அனேகமாயிரஞ் சூரியர்க்குச் சமானமான தனது சக்ராயுதத்தை யெடுத்துப் பிரயோகித்து, அப்பாணனது ஆயிரந்தோள்களையும் தாரைதாரையாய் உதிர மொழுக அறுத்து அவனுயிரையும் சிதைப்பதாகவிருக்கையில், பரமசிவன் அருகில் வந்து வணங்கிப் பலவாறு பிரார்த்தித்ததனால் அவ்வாணனை நான்கு கைகளோடும் உயிரோடும் விட்டருளி, பின்பு அவன் தன்னைத்தொழுது அநிருத்தனுக்கு உஷையைச் சிறப்பாக மணம்புரிவிக்க, அதன்பின் மீண்டுவந்தனன். ... *

## நரகாஸுரனை நாசஞ்செய்து கற்பகங் கொணர்ந்தது.

எம்பெருமான் வராஹாவதாரஞ் செய்து பூமியைக் கோட்டாற் குத்தியெடுத்த பொழுது எம்பெருமானுடைய ஸ்பர்சத்தால் பூமிதேவிக்குக் குமாரனாய்ப் பிறந்தவனும் அஸமயத்திற் சேர்ந்து பெறப்பட்டதனால் அஸுரத்தன்மை பூண்டவனுமான 'நரக' னென்பவன் ப்ராக்ஜோதிஷ மென்னும் பட்டணத்திலிருந்துகொண்டு ஸகல பிராணிகளையும் நலிந்து தேவஸித்த கந்தர்வாதிகளுடைய கன்னிகைகளையும் பற்பலரைப் பலாத்காரமாய் அபஹரித்துக் கொண்டுபோய்த் தான் மணம் புணர்வதாகக் கருதித் தன் மாளிகையிற் சிறைவைத்து, வருணனது குடையையும் 'மந்தரகிரி' சிகரமான ரத்நபர்வதத்தையும் தேவர்களின் தாயான அதிதிதேவியின் குண்டலங்களையும் கவர்ந்து போனதுமன்றி இந்திரனுடைய ஐராவத யானையையும் அடித்துக்கொண்டு போகச் சமயம் பார்த்திருக்க, அஞ்சிவந்து பணிந்து முறையிட்ட இந்திரன் வேண்டுகோளால் கண்ணபிரான் கருடனை வரவழைத்துப் பூமிதேவியின் அம்சமான ஸத்தியபாமையுடனே தான் கருடன்மேலேறி அந்நகரத்தை யடைந்து சக்ராயுதத்தைப் பிரயோகித்து அவனது மந்த்ரியான 'முரன்' முதலிய பல அஸுரர்களையும் இறுதியில் அந்த நரகாஸுரனையும் அறுத்துத் தள்ளி அழித்து அவன் பல திசைகளிலிருந்து கொண்டு வந்து சிறைப்படுத்தியிருந்த பதினாறாயிரத்தொரு நூறு கன்னிகைகளையும் ஆட்கொண்டு நரகனால் முன்பு கவரப்பட்ட (இந்திரன் தாயான அதிதி தேவியின்) குண்டலங்களை அவ்வதிதிதேவிக்குக் கொடுக்கும் பொருட்டு ஸத்யபாமையுடனே கருடன் தோள்மேலேறிக்கொண்டு தேவலோகத்துக்குச் செல்ல, அங்கு இந்திராணி ஸத்யபாமைக்கு ஸகல உபசாரங்களைச் செய்தும் தேவர்க்கே உரிய பாரிஜாத புஷ்பம் மானிடப் பெண்ணாகிய இவளுக்குத் தகாததென்று ஸமர்ப்பிக்கவில்லையாதலின், அதனைக்கண்டு பாமை விருப்புற்றவளாய் நாதனை நோக்கி 'பிராணநாதனே! இந்தப் பாரிஜாத தருவை த்வாரகைக்குக் கொண்டுபோகவேண்டும்' என்றதைக் கண்ணபிரான் திருச்செவிசாத்தி உடனே அந்த வ்ருக்ஷத்தை வேரோடு பெயர்த்துத் தோளின்மேல் வைத்தருளி, அப்பொழுது இந்திராணி தூண்டிவிட்டதனால் வந்து மறித்துப் போர் செய்த இந்திரனை ஸகல தேவஸைந்யங்களுடன் சங்கநாதத்தினாலே பங்கப்படுத்தி, பின்பு பாரிஜாத மரத்தை த்வாரகைக்குக் கொண்டு வந்து ஸத்யபாமை வீட்டுப்புறக்கடைத் தோட்டத்தில் நாட்டி யருளினன். ... *

## ருக்மிணி பரிணயம்.

விதர்ப்ப தேசத்தில் குண்டினமென்கிற பட்டணத்தில் பீஷ்மகனென்கிற அரசனுக்கு ருக்மி என்கிற பிள்ளையும் ருக்மிணி என்கிற பெண்ணுமிருந்தனர். அந்த ருக்மிணியானவள் ஸாக்ஷாத் ஸ்ரீமஹாலக்ஷ்மியின் அவதாரம். அவளுக்கு யுக்த

வுயது வந்தவுடன் கிருஷ்ணன் சென்று இப்பெண்ணை எனக்கு விவாஹஞ் செய்து கொடுக்க வேணுமென்று கேட்க; ருக்மி என்பவன் அவளைச் சேதிதேசத்தரசனை சிசுபாலனுக்குக் கொடுக்க விரும்பினவனாதலால் கிருஷ்ணனுடைய விருப்பத்திற்கு உடன்படா தொழிந்தான். சிலநாள் கழிந்தபின் அந்த ருக்மிணியின் கல்யாணத்துக்காக ஸ்வயம்வரம் * கோடித்து ஸகலதேசத்தரசர்களையும் ருக்மி வரவழைத்தான். அவர்கள் வந்து சேர்ந்தவுடனே கிருஷ்ணனும் பலராமன் முதலியவர்களைக் கூட்டிக் கொண்டு அப்பட்டணத்துக்குப் போய்க்கல்யாணத்துக்கு முதல்நாள் அந்த ருக்மிணியை உபாயமாய் அபஹரித்துக் கொண்டு வந்துவிட்டான்; தந்தவக்த்ரன் முதலிய பல அரசர்கள் போர் செய்ய எதிர்த்துவர அவர்களைப் பலராமனும் கண்ணபிரானும் முதுகு காட்டி ஓடும்படி செய்துவிட்டனர். பிறகு ருக்மிணிப் பிராட்டியின் தமையனை ருக்மியானவன், 'இப்படிச் செய்கையாவது என்?' என்று எதிர்பொருது மீட்பதாக நினைத்து வந்து கண்ணனைத் தகைய, அப்போது ஸ்ரீ கிருஷ்ணன் இவனைக் கொன்றால் ருக்மிணி மனம் வருந்துவள் என்று அவனைப் பிடித்துத்தனது தேர்க்காலிலே கட்டி அப்பால் அவனது தலையைச் சிரைத்திட்டு மானபங்கம் செய்துவிட்டுப் பின்பு ருக்மிணியை விதிபூர்வமாகக் கல்யாணஞ் செய்து கொண்டு அவளிடத்தில் ப்ரத்யும்நனென்ற பிள்ளையைப் பெற்றான். அதனால் கண்ணன், காமன்றன் தாதையென்றும் வழங்கப்பட்டான்.

### ஆமையாய்க் கங்கையாய்.........தானுமானது.

பெரியாழ்வார் திருமொழியில் (4-9-5)* ஆமையாய்க் கங்கையாய் ஆழ்கடலாயவனியாய் அருவரைகளாய், நான்முகனாய் நான் மறையாய் வேள்வியாய்த் தக்கணையாய்த் தானுமானான் * என்கிற பாசுரத்தில் ஓர் அற்புதமான வரலாறு அநுஸந்திக்கப்பட்டுள்ளது. மேலெடுத்த பாட்டின் மூன்றாமடியில் சேமமுடைநாரதனார் சென்றுசென்று துதித்திறைஞ்ச * என்றிருப்பதனால் நாரதமஹர்ஷி செய்த துதியின் அநுவாதமிதுவென்று தெரியவரும். ஸ்ரீக்ருஷ்ணபகவான் ரைவதக மலையில் எழுந்தருளியிருந்த போது, ஸ்ரீ நாரதமஹர்ஷி வந்துவணங்கி ஸ்ரீக்ருஷ்ணபகவானை நோக்கி "ஸர்வ தேவர்களிற்காட்டிலும் நீர் ஆச்சரியகரரும் தன்யரு [தன்யன்—க்ருதார்த்தன்] மாக இராநின்றீர்; இங்ஙனிருப்பார் இவ்வுலகில் வேறு யாருமில்லை'' என்று விண்ணப்பஞ் செய்ய, கண்ணபிரான் அதைக் கேட்டுப் புன்முறுவல் செய்து, "முனிவனே! தக்ஷிணைகளோடு கூட நான் ஆச்சரியனாகவும் தன்யனாகவும் சொல்லப்பட்டவன்'' என்றருளிச் செய்ய, அதனைக்கேட்ட முனிவன் மிகவும் மனமகிழ்ந்து, "பிரானே! தேவரீர் அருளிச்செய்த வாக்கியத்தினால் அடியேன் மிகவும் மகிழ்வுற்றேன்; இனி வந்த வழியே விடை கொள்ளுகிறேன்'' என்று விண்ணப்பஞ் செய்து போக நினைத்த வளவில், அங்குக் கண்ணனைப் புடைசூழ்ந்திருந்த அரசர்கள் இப்படி ஸ்ரீக்ருஷ்ணனுக்கும் நாரதமுனிவற்கும் நடந்த ஸம்வாதத்தின் உட்பொருளைத் தாங்கள் அறியாமையாலே ஸ்ரீக்ருஷ்ணனுடைய திருமுக மண்டலத்தை நோக்கி நாரத முனிவன் தேவரீரைக் குறித்துச் சொன்ன வாக்கியமும், அதற்கு உத்தரமாக தேவரீர் அருளிச் செய்த வாக்கியமுமாகிற இந்த மஹாரஹஸ்யம் எங்களுக்கு இன்னதென்று விளங்கவில்லை, இதனை விரித்துரைக்க வேணும்'' என்று பிரார்த்திக்க, கண்ணபிரானும் அம்முனிவன் றன்னையே கூறுமாறு நியமித்தருள, அம் முனிவன் அவ்வரசர்களை

நோக்கி இவ்வண்ணம் கூறத்தொடங்கினன். நான் ஒருகால் கங்கைக் கரையிலே த்ரிஷவணஸ்நாநாதிகளைப் பண்ணிவர்த்தியா நிற்கச்செய்தே, ஒருநாள் இரவு கழிந்து சூரியனுதித்த வளவில், கூப்பிடுவழியளவு அகலமும் அதில் இரட்டி நீளமுமாய் நீரினுள்ளே நனைந்து உடம்பு முழுதும் பாசிபற்றிக் கண்ணுக்கு இனிதாயிருப்பதொரு ஆமையைக் கண்டு "இப்படி நீரினுள்ளே ஒன்றையும் சிந்தியாமல் சங்கையற்றுத் திரியாநின்ற நீ அற்புதமான சரீரத்தையுடையனாகா நின்றாய், தந்யனாகா நின்றாய் என்று அறுதியிட்டிருக்கிறேன்" என்று நான் சொல்ல; அதனைக் கேட்ட அந்த ஆமை என்னைப் பார்த்து. ஒரு மனுஷ்யன் சொல்லுவதுபோல, "வாரீர் முனிவரே, என்னிடத்தில் ஆச்சரியமேது? நான் எங்ஙனே தன்யனாகா நின்றேன்? என்னைப்போன்ற பதினாயிரம் ஸத்வங்கள் ஸஞ்சரிக்கப்பெற்ற கங்காநதி யன்றோ அங்ஙனாவது" என்று சொல்ல, பிறகு நான் அக்கங்கையைக் குறித்து அங்ஙனே சொல்ல; அதுகேட்ட அக்கங்கையானது ஒரு வடிவுகொண்டு நின்று ஆமையைப் போலவே சொல்லி "என்னைப்போற் பல்லாயிரம் நதிகள் சென்று சேர்தற்கிடமான கடலன்றோ ஆச்சரியமும் தந்யமுமாவது" என்று சொல்ல, பிறகு நான் அக்கடலை நோக்கி அங்ஙனே சொல்ல, அக்கடல் என்னைப் பார்த்து "நீ சொன்னவை யிரண்டும் எனக்கில்லை; யாதொரு பூமியின் மேல் நான் வாஸம் பண்ணா நிற்கிறேனோ அப்பூமிக்கன்றோ அவையிரண்டுமுள்ளது" என்ன; பிறகு நான் பூமியை நோக்கிப் புகழ்ந்து கொண்டு "ஆச்சரிய பூதையாகா நின்றாய், தந்யை யாகா நின்றாய்" என்று சொல்ல, அதுகேட்ட பூமி "யான் அங்ஙனுள்ளவளல்லள், எனக்கு ஆதாரமாயிருக்கின்ற பர்வதங்களன்றோ அப்படிப்பட்டவை" என்ன, பிறகு நான் அப்பர்வதங்களைக் கிட்டி அங்ஙனே சொல்ல, அவை என்னைப் பார்த்து "அப்படிப்பட்டவை நாம் அல்லோம், பிரஜாபதியான பிரமனன்றோ இவை யிரண்டையு முடையான்" என்ன, பிறகு நான் பிரமனைச் சென்று கிட்டி அடைவுபட அநுவர்த்தித்துப் புகழ்ந்துகொண்டு "பிரமனே! ஆச்சரியனாகா நின்றாய், தந்யனாகா நின்றாய், உன்னையொப்பார் ஆருமில்லை என்ன; அதைக்கேட்ட பிரமன் என்னைப் பார்த்து "இங்ஙனே என்னைப் புகழ்வதென்? ருக், யஜுஸ், ஸாம, அதர்வணம் என்னும் பெயர்களையுடையனவும் தத்துவங்களை உணர்த்துவனவும், உலகங்களையும் என்னையும் தரியாநின்றனவுமான வேதங்களன்றோ அப்படிப் பட்டவை" என்ன, பிறகு நான் வேதங்களைக் கிட்டி 'நீங்களன்றோ ஆச்சரிய பூதரும், தந்யரும்" என்ன, அந்த வேதங்கள் என்னைப் பார்த்து "நாங்கள் யஜ்ஞார்த்தமாகப் படைக்கப்பட்டவர்களாதலால் எமக்குப் பராயணங்களான [பராயணம்—சிறந்த கதி] அந்த யஜ்ஞங்களன்றோ அப்படிப்பட்டவை" என்ன, பின்பு நான் அந்த யஜ்ஞங்களைப் பார்த்துப் புகழ்ந்து "உலகத்தில் உங்களிற் காட்டில் ஆச்சரியங்களுமில்லை, தந்யங்களுமில்லை" என்ன, அந்த யஜ்ஞங்கள் என்னைப் பார்த்து ஆச்சரிய சப்தமும், தந்ய சப்தமும் எங்கள் பக்கலில் இல்லை. விஷ்ணுவிடத்தில் அவை உள்ளன; அவ்விஷ்ணுவே எங்களுக்குச் சிறந்த கதி; தீயில் ஹோமம் பண்ணப்பட்டு எம்மால் ஸ்வீகரிக்கப்படும் நெய்யை அவ்விஷ்ணு தானே கொடுக்கிறார்" என்ன, அதனைக்கேட்ட யான் பூமியில் வந்து உங்கள் திரளின் நடுவே யெழுந்தருளியிருக்கிற ஸ்ரீக்ருஷ்ண பகவானைக் கண்டு ஸேவித்து "நீர் ஆச்சரியருமாகா நின்றீர், தந்யருமாகா நின்றீர்" என்று விண்ணப்பஞ் செய்ததற்கு உத்தரமாக—தக்ஷிணைகளோடு கூட நான் ஆச்சரிய

னுகவும் தந்யனுகவுஞ் சொல்லப்பட்டவன் என்று கண்ணபிரானருளிச் செய்த வார்த்தை என்னை மகிழ்வித்தது.

எங்ஙனே யென்னில்— எல்லா யஜ்ஞங்களுக்கும் தக்ஷிணையோடே கூடியிருந்துள்ள ஸர்வேச்வரன் கதியாகையாலே, "தக்ஷிணையோடு கூட நான் ஆச்சரியனுகா நின்றேன், தந்யனுகா நின்றேன்" என்று கண்ணபிரான் அருளிச்செய்த இவ்வாக்கியத்தினால் என்னுடைய ப்ரச்நம் நிறைவேறிற்று என்று சொல்லி, முதலில் ஆமை யிடத்துச் சொல்லப்பட்டு, அநந்தரம் பரம்பரையாக இவ்வளவும் வந்த "ஆச்சரியனுகா நின்றாய், தந்யனுகா நின்றாய்" என்ற வாக்கியம் தக்ஷிணையோடு கூடின இக்கண்ணபிரானைக் குறித்து என்னால் பிரதிபாதிக்கப்பட்டது இந்த ரஹஸ்யார்த்தத்தை உங்கட்கு நான் சொல்லித் தலைக்கட்டினேன், இனி நான் வந்த வழியே போகிறேன் என்று ஸ்ரீஹரிவம்ச—விஷ்ணு பர்வத்தில் நூற்றுப் பதினேராவது அத்தியாயத்தில் சொல்லப்பட்ட கதை இப்பாட்டிற் சுருங்க அருளிச்செய்யப்பட்டதென்க. ... ... ... ... ... ... *

காண்டவ வனத்தைத் தீமூட்டிவிட்டது.

ஒருநாள் அக்நிபகவான் ஒரு அந்தணவேடம் பூண்டு, அர்ஜுநனும் கண்ணபிரானும் கூடியிருக்குமிடத்திலே வந்துசேர, அவ்வந்தணனைக் கிருஷ்ணார்ஜுநர்கள் நன்கு உபசரிக்க, அவன் உணவு வேண்ட, 'வேண்டிய உணவை அளிப்போம்' என்று அவ்விருவரும் உறுதிமொழி கூற, உடனே அவ்வந்தணன் தான் இன்னனென்று உண்மை தெரிவித்துக் காண்டவவனத்தைத் தனக்கு இரையாக அளிக்குமாறு வேண்ட அவர்களும், 'பல கொடிய அசுரர்களும் அரக்கர்களும் துஷ்டமிருகங்களும் நிரம்பியிருக்குமிந்தக் காடு அழிந்தொழுவது நன்றே' என்று நிச்சயித்து அக்நி பகவானை நோக்கி 'அங்ஙனமே உண்பாயாக' என்று அநுமதிதந்ததின் பேரில் அக்நி அக்காடு முழுவதையும் ஆக்ரமித்துப் பூர்ணதிருப்தியாக உண்டனன் என்ற கதை மஹாபாரதத்தில் ஆதிபருவத்தில் விரித்துரைக்கப்பட்டுள்ளது. மண்ணின் பாரம் நீக்குதற்கே வடமதுரைப் பிறந்தவனான கண்ணபிரான் தனது அன்பனை இந்திரன் வருந்தும்படி அவனது காட்டை யழிக்குமாறு அநுமதித்தது அவதாரப்ரயோஜனம் நிறைவேறுதற்காக வென்க; அக்காட்டிலுள்ள அளவற்ற துஷ்ட ஜந்துஸமூஹங்கள் தொலைந்தொழியும் முகத்தால் பூமியின் பாரந்தைக் குறைத்தருளினனென்றுணர்க. இவ்வனத்தின் தன்மையைப்பற்றி வில்லிபுத்தூராழ்வார் பாரதத்தில் காண்டவவன தகனச் சருக்கத்தில் "மிடைந்த நால்வகை மகீருகங்களு நெடு வெற்பினங்களுந் துன்றி, அடைந்த தானவரரக்கர் பேருரகருக் காலயங்களுமாகிக், குடைந்துசோரி கொள்வாளுகிரரி முதற்கொடு விலங்கினமிக்குக், கடைந்த கூரெயிற்றால் தக்ககனும் வாழ் கானனமது கண்டீர்" என்ற செய்யுள் இங்குக் குறிக்கொள்ளத் தக்கது ... *

துரியோதனனிட்ட பொய்யாஸனத்தினுள் மல்லரை முடித்தது.

கண்ணபிரான் பாண்டவர்கட்குத் தூதனாய்த் தன்னிடம் வரப்போகிறானென்பதை யறிந்த துரியோதனன் எவ்வகையினாலேனும் க்ருஷ்ணனை முடித்த விடுவதே கருமமென்று துணிந்து ரஹஸ்யமாகத் தனது ஸபாமண்டபத்தில் மிகப் பெரிய நிலவறை யொன்றைத் தோண்டுவித்து அதில் அநேக மல்லர்களை ஆயுதபாணிகளாய் உள்ளே யிருக்கவைத்து அப்படுகுழியைப் பிறர் அறிய வொண்ணுதபடி மூங்கிற்

பிளப்புக்களால் மேலே மூடி அதன்மேற் சிறந்த ரத்நாஸந மொன்றை யமைத்து அவ்வாஸநத்தின்மீது கண்ணபிரானை வீற்றிருக்கச் சொல்ல,கண்ணன் அங்ஙனமே அதன்மேலேறின மாத்திரத்திலே மூங்கிற் பிளப்புக்கள் முறிபட்டு ஆஸனம் உள்ளிறங்கிப் பிலவறையிற் செல்லுமளவில் மல்லர்கள் எதிர்த்துவர, பெருமான் மிகப் பெரிதாக விசுவரூபமெடுத்துப் பல கைகளையுங் கால்களையுங்கொண்டு எதிர்த்து அந்த மல்லர்களை மடிவித்தான். இக்கதையைத் திருமங்கையாழ்வாரொருவரே இரண்டு மூன்றிடங்களில் அநுஸந்திக்கிறார். பெரியதிருமொழி (9-1-8) *அரவுநீள் கொடியோனவையுளாசனத்தை அஞ்சிடாதேயிட, அதற்குப் பெரியமாமேனி அண்ட மூடுருவப் பெருந்திசை யடங்கிட நிமிர்ந்தோன்* என்ற பாசுரத்தில் விச்வரூப மெடுத்த கதையைமட்டு மருளிச்செய்தார். திருக்கடன்மல்லைப் பதிகத்தில் (2-5-5) ''தூதிற் சென்று அப் பொய்யறைவாய்ப் புகப் பெய்த மல்லர் மங்கக் காய்ந்தானை' என்றவிடத்து அப்போது செய்த மல்லவதத்தை யநுஸந்தித்தார். ஸ்ரீகாஞ்சீபுரியில் பாடகத்தெம்பெருமான் மிகப்பெரிய திருமேனியோடு ஸேவைஸாதிப்பது துரியோதனனிட்ட பொய்யாஸனத்தினுள் விச்வரூபமெடுத்த ஸந்தர்ப்பமென்று உணர்க.

## பார்த்தன் தேரில் பாகனாய் நின்று கீதையோதினது.

கண்ணபிரான், பாண்டவர் துரியோதனாதியர் என்ற இருவகுப்பினரையும் ஸந்தி செய்விக்கைக்காகத் துரியோதனாதியரிடம் தூதாகச் சென்று 'பாண்டவர்களும் நீங்களும் பகைமை கொள்ள வேண்டாம்; ராஜ்யத்தில் இருவகுப்பினர்க்கும் பாகமுண்டு; ஆதலால் ஸமபாகமாகப் பிரித்துக்கொண்டு ஸமாதானமாக அரசாட்சி செய்து வாழுங்கள்'' என்று பலவாறாக அருளிச்செய்ய, அவர்கள் நல்வார்த்தைகட்குச் சிறிதும் உடன்படாமல் 'பராக்ரம மிருந்தால் போர் செய்து ஜயித்துக் கொள்ளட்டும்; இந்தப் பூமி வீரர்க்கே உரியது' என்று மிக்க செருக்குக் கொண்டு சொல்லவே, தான் பாண்டவபக்ஷபாதியாயிருந்து அவர்கட்கே வெற்றி யுண்டாக்கும் பொருட்டுப் பார்த்தன் தேரில் பாகனாய் நின்றனன். அங்ஙனம் பாகனாய் நின்ற போதன்றோ கீதோபதேசம் செய்தருள ப்ராப்தமாயிற்று. அப்போது யுத்தம் செய்ய மிருந்த உத்ஸாஹத்தோடு வந்த அர்ஜுனன் தான் யுத்தம் பண்ணமுடியாதென்று சொல்லும்படி அவனுக்கு மதிவிப்ரமத்தைக் கண்ணபிரான் விளைத்து, அவன் வாயினால் ''சிஷ்யஸ் தேஹம் சாதி மாம் த்வாம் ப்ரபந்நம்'' என்று சொல்லுவித்து அவனைத் தெளிவிக்கும் வியாஜமாக கீதா சாஸ்த்ரத்தை 'யவதரிப்பித்தது பரம கருணையினாலாகும். கண்ணபிரான் கீதா சாஸ்திர மருளிச் செய்ததை ஸுஸ்பஷ்டமாகக் கூறியவர் திருமழிசைப்பிரான். இவர் தமது திருவந்தாதியில் ''சேயன்னியன் சிறியன் மிகப்பெரியன், ஆயன் துவரைக்கோனாய் நின்ற மாயன் அன்றோதிய வாக்கு'' என்றருளியது காண்க. .... ... ...*

## ஆழியால் இரவியை மறைத்து ஜயத்ரதனை மடித்தது.

மஹாபாரத யுத்தத்திற் பதின்மூன்றுநாளிலே அர்ஜுன புத்திரனை அபிமன்யுவைத் துரியோதனனது உடன்பிறந்தவள் கணவனான ஸைந்தவன் கொன்றுவிட, அங்ஙனம் தன்மகனைக் கொன்ற அந்த ஜயத்ரதனை மற்றைநாள் ஸூர்யாஸ்தமனத்திற்குள் தான் கொல்லாவிடின் தீக்குதித்து உயிர்விடுவதாக அர்ஜுநன் சபதஞ்செய்ய, அதனையறிந்த பகைவர்கள் பதினான்காநாட் பகல் முழு

வதும் ஜயத்ரதனைவெளிப்படுத்தாமல்ஸேனையின் நடுவே நிலவறையில் மறைத்து வைத்திருக்க, அர்ஜுனனது சபதம் பொய்த்துவிடுமேயென்று சிந்தித்த கண்ண பிரான் ஸூர்யனை அஸ்தமிப்பதற்குச் சிலநாழிகைக்கு முன்னமே தன் சக்ராயுதத் தால் மறைத்துவிட, அப்பொழுது எங்கும் இருள் மிடைந்ததனால் அர்ஜுனன் அக்நி பிரவேசஞ் செய்யத் தொடங்க, அதனைக்களிப்போடு காணுதற்குத் துரியோதனாதிய ருடனே ஜயத்ரதன் வந்து எதிர் நிற்க, அச்சமயத்திற் கண்ணன் திருவாழியை வாங்கி விடவே, பகலாயிருந்ததனால் உடனே அர்ஜுனன் ஜயத்ரதனைத் தலைதுணித்தனன்.

### ஸாந்தீபிநிபுத்திரனை மீட்டுக்கொடுத்தது.

ஸ்ரீக்ருஷ்ணன் கம்ஸனைக்கொன்று உக்ரஸேநனுக்கு முடிசூட்டியபின்பு, அவந்திநகரத்திலிருந்து ஸாந்தீபிநியென்னும் ப்ராஹ்மணோத்தமர் பக்கல் சென்று ஸகல சாஸ்த்ரங்களையும் அத்யயநம் பண்ணிப் பிறகு குருதக்ஷிணை ஸமர்ப்பிக்கப் பார்க்கிறவளவிலே, அவ்வாசிரியர் கண்ணனுடைய சக்திவிசேஷத்தை யறிந்தவரா கையால் 'பன்னிரண்டு வருஷத்திற்குமுன்பு மேல்கடலில் ப்ரபாஸதீர்த்த கட்டத் திலே நீராடும்போது முழுகியிறந்துபோன என்புத்திரனைக் கொண்டுவந்து தரவேண் டும்' என்று அபேக்ஷிக்க, கண்ணபிரான் 'அப்படியே செய்கிறேன்' என்று சொல்லிக் கடற்கரை சேர்ந்து, சங்கினுருவங்கொண்டு ஸமுத்ர ஜலத்தில் வசிக்கின்ற பஞ்சஜந னென்கிற அசுரனே அவ்வந்தணர்ச்சிறுவனைக் கொண்டுபோயினனென்பதை அங்கு வருணன் சொல்லக்கேட்டுக் கடலில் ப்ரவேசித்து அவ்வசுரனைக்கொன்று அவனுட லாகிய பாஞ்சஜந்யத்தையெடுத்து வாயில் வைத்து முழக்கிக்கொண்டே யமபட்டணத்திற்கு எழுந்தருளி அங்கு யாதனையிற்கிடந்த அக்குமாரனைப் பூர்வ தேஹத்தில் சிறிதும் பேதமில்லாதபடி கொணர்ந்து கொடுத்தருளினன். [இங்கே சங்காபரிஹாரங்கள்.] இடைப்பிள்ளையான கண்ணபிரான் ஸாந்தீபிநியிடத்தில் வேதமோதினனென்பதும் உபநயநஸம்ஸ்காரம் பெற்றனனென்பதும் எங்ஙனே சேரு மென்று சிலர் சங்கிப்பர்; * ஒருத்திமகனாய்ப்பிறந்து ஓரிரவிலொருத்திமகனா யொளித்துவளர்ந்தவனான கண்ணன் க்ஷத்ரிய ஜாதியிற் பிறந்தவன். பிராமணர் க்ஷத்ரியர் வைசியர் என்னும் மூன்று ஜாதியாரும் தேஹோத்பத்தியாகிய இயற் கைப் பிறப்புடனே செயற்கைப் பிறப்பாக உபநயநமென்கிற ஸம்ஸ்காரத்தாலாகும் ஜ்ஞாநஜந்மத்தையுங் கொண்டு இருபிறப்பாளராய் 'த்விஜர்' எனப்படுவரென்க.

### வைதிகன்பிள்ளைகளைக் கொணர்ந்து கொடுத்தது.

ஒரு பிராமணனுக்கு முறையே பிறந்த மூன்றுபிள்ளைகள் பிறந்த அப்பொ ழுதே பெற்றவளுமுட்பட முகத்தில் விழிக்கப்பெறாதபடி இன்னவிடத்திலே போயிற் றென்று தெரியாமல் காணவொண்ணாது போய்விடுகையாலே நான்காம் பிள்ளையை மனைவி ப்ரஸவிக்கப் போகிறவளவிலே அந்த அந்தணன் கண்ணபிரானிடம் வந்து 'இந்த ஒரு பிள்ளையையாயினும் தேவரீர் பாதுகாத்துத் தந்தருளவேண்டும்' என்று ப்ரார்த்திக்க, க்ருஷ்ணன் 'அப்படியே செய்கிறேன்' என்று அநுமதி செய்தபின், ஒரு யாகத்திலே தீக்ஷிதனாயிருந்த கண்ணபிரான் எழுந்தருளக் கூடாதென்பதுபற்றி அர்ஜுனன் 'நானேபோய் ரக்ஷிக்கிறேன்' என்று ப்ரதிஜ்ஞை பண்ணி, ப்ராஹ்மணனையுங் கூட்டிக்கொண்டுபோய், ப்ரஸவிக்கிற க்ருஹத்தைச்

சுற்றும் காற்றுமுட்படப் பிரவேசிக்கவொண்ணாதபடி சரக்கூடங்கட்டிக் காத்துக் கொண்டு நிற்கையில் பிறந்த பிள்ளையும் வழக்கப்படியே பிறந்தவளவிற் காண வொண்ணாதே போய்விடவே, ப்ராஹ்மணன் வந்து அர்ஜுநனை மறித்து 'க்ஷத்ரியாதமா! உன்னாலேயன்றோ என் பிள்ளை போம்படியாயிற்று; க்ருஷ்ணன் எழுந்தருளிக் காப்பதை நீயன்றோ தடுத்தாய்!' என்று நிந்தித்துக் கிருஷ்ணன் பக்கலிலே இழுத்துக் கொண்டுவர, கண்ணபிரான் கண்டு புன்சிரிப்புக்கொண்டு 'அவனை விடு; உனக்குப் பிள்ளையை நான் கொண்டுவந்து தருகிறேன்' என்றருளிச் செய்து, ப்ராஹ்மணனை யும் அர்ஜுநனையும் தன்னுடன் கொண்டு தேரிலேறி, அர்ஜுநனைத் தேர்செலுத்தச் சொல்லி, அந்தேர்க்கும் அவர்கட்கும் திவ்யசக்தியைத் தனது ஸங்கல்பத்தால் கற்பித்து, இவ்வண்டத்துக்கு வெளியே நெடுந்தூர மளவுங் கொண்டு போய், அங்கு ஓரிடத்தில் தேருடனே இவர்களை நிறுத்தி, தேஜோரூபமான பரமபதத்திலே தன் நிலமாகையாலே தானே போய்ப் புக்கு, அங்கு நாச்சிமார் தங்கள் ஸ்வாதந்திரியங் காட்டுகைக்காகவும் கண்ணபிரானது திவ்ய ஸௌந்தர்யத்தைக் கண்டு களிக்கைக் காகவும் அழைப்பித்து வைத்த அந்தப் பிள்ளைகள் நால்வரையும் அங்குநின்று பூர்வரூபத்தில் ஒன்றுங்குலையாமற் கொண்டுவந்து கொடுத்தருளினன். ...

## துரியோதனன் சபையில் நிலைதடுமாறினது.

கண்ணபிரான் பாண்டவ தூதனாய்த் துரியோதனனிடமெழுந்தருள, அக் கண்ணனது வருகையை ஏற்கனவே அறிந்திருந்த துரியோதனன் ஒருபெருஞ் சபையைக் கூட்டி அதில் அரசர்களையெல்லாம் நாற்காலிகளில் வீற்றிருக்கச் செய்து தானும் சிங்காசனத்திலமர்ந்திருந்து அரசர்களை நோக்கி 'ஓ அரசர்களே! இப்போது க்ருஷ்ணன் இங்கு வரப்போகிறான். அவன் வரும்போது ஒருவருமெழுந்து மரியாதை செய்யக்கூடாது; செய்தால் என்னுடைய நிக்ரஹத்திற்கு இலக்காவீர்கள்' என்று கடுமையாக நியமித்துத் தானும் உறுதியுடனிருந்தான். உடனே கண்ணபிரானும் அவ்வாறே எழுந்தருளியாயிற்று. "ஆனைவரும் பின்னே, மணியோசை வரும் முன்னே" என்னுமாபோலே கண்ணனுடைய சோதிச் சுடர்விளக்கம் முன்னமே வந்துலவ, அவ்வளவிலேயே ஸபையிலிருந்த அரசர்களனைவரும் பரவசர்களாய் எழுந்துவிட்டார்கள். அதுகண்ட துரியோதனன் தானும் துடைநடுங்கி யெழுந்து விட்டான். தானெழுந்தது தனக்குந்தெரியாமல் அரசர்களைநோக்கி 'என்கட்டளையை மீறி ஏன்எழுந்தீர்கள்? என்றுகேட்க, 'பிரபு எழுந்ததனால் நாங்களெழுந்தோம்' என்று அவர்கள் கூற, 'அப்படியா ? நானெழுந்தேனா என்ன?' என்று சொல்லிக் கொண்டே ஆசனத்திலுட்கார்ந்துகொண்டான். [இவ்வரலாறு மஹாபாரதத்தில் *யதார்ஹம் கேசவே வ்ருத்திம் அவசா: ப்ரதிபேதிரே* என்று தெரிவிக்கப்பட்டது. பெரியாழ்வார் (1-8-5) * சழல்மன்னர் சூழக் கதிர்போல் விளங்கி, எழலுற்று மீண்டேயிருந்துன்னை நோக்கும், சுழலைப் பெரிதுடைத் துச்சோதனன் * என்கிற பாசுரத்தில் இதனை யநுஸந்தித்தார். இதற்கு அடுத்தபடியாக நடந்த வரலாறு துரியோதனன் பொய்யாஸனமிட்டுப் பிலவறையில் மல்லர்களை நிறுத்தி வைத்த தும் அவர்கள் கண்ணனால் வதைக்கப்பட்டதுமாம். அது திருமங்கையாழ்வார் அநு பவித்தது. .... ... .... ....

## தேரின்மேல் முன்னின்று மோழையெழுவித்தது.

கண்ணபிரான் பாண்டவர்களைத் தேரில்இருத்தித் தான் ஸாரதியாய்த்தேரை யோட்டிக்கொண்டு குருக்ஷேத்திரத்திற்குச் செல்லும் வழியில் தண்ணீர் காணக் கிடைக்காத கொடிய பாலைநிலமாயிருக்க, பாண்டவர்களும் விடாய்த்துத் தேர்க் குதிரைகளும் விடாய்த்து நகரமாட்டாத நிலைமைநேர, பாண்டவபக்ஷபாதியான கண்ணபிரான் கடினமான ஸ்தலத்திலும் நீர் நரம்பு அறியவல்லவனாகையாலே அங்கு வாருணாஸ்திரத்தைப் பிரயோகித்துக் கீழுள்ளநீரை வெளிக்கிளப்பிக் குதிரைகளைவிட்டு நீரூட்டிப்புரட்டி யெழுப்பிக்கொண்டுவந்து தேரிலேபூட்டி நடத்தினன். இக்கதையைப் பெரியாழ்வாரொருவர்மட்டும் *மன்னர்மறுக மைத்துனன்மார்க்கொரு தேரின்மேல் முன்னங்குநின்று மோழையெழுவித்தவன்* (4-2-7)என்கிற பாசுரத்தில் அநுஸந்தித்தார். இந்தஸ்தலம் இன்றைக்கும் 'பாணகங்கா' என வழங்கப் பெறுகின்றது.

## மருமகன்றன் சந்ததியை உயிர்மீட்டுக் கொடுத்தது.

பாரதப்போரில் அர்ஜுனன் மகனான அபிமந்யுவின் மனைவியாகிய உத்தரை கர்ப்பிணியாயிருக்க, அவளுடைய கருவை நோக்கி அச்வத்தாமா பிரயோகித்த அபாண்டவாஸ்திரத்தினால் அக்கருவிலிருந்த சிசு [பரீக்ஷித்து] நீறாகியொழிய அச்சிசுவை மீண்டும் உயிர்பெறுத்தவேணுமென்று ஸுபத்திரையினால் பிரார்த்திக்கப் பட்ட கண்ணபிரான் தனது செந்தாமரைமலர்போன்ற திருவடியினால் அச்சிசுவை அடிதொடங்கி முடியீறாக ஸ்பர்சித்து "நான் அஸ்கலித ப்ரஹ்மசர்யனும் ஸத்ய வாதியும் அவ்யாஹதைச்வர்யனுமாயின் இக்குழந்தை உயிர்பெறுக" என்று சொல்லுகையில் உத்தரக்ஷணத்திலேயே அச்சிசு உயிர்பெற்றுக் கருக்குழியில் சேர்ந்து ப்ராப்தகாலத்தில் ப்ரஸவம்பெற்றது. [இதுவும் பெரியாழ்வாரொருவரே அநுஸந்தித்த கதை. மஹாபாரதத்தில் ஆச்வமேதிக பருவத்துக்கு உள்ளீடான அநுகீதாபருவத்தில் 66 to 70 அத்தியாயங்களில் பரக்கக்காண்க.] ... ... *

## பார்த்தன் தெளிந்தொழிந்த பைந்துழாயான் பெருமை

மஹாபாரத யுத்தத்தில் அர்ஜுனனுக்குப் பாசுபதாஸ்த்ரம் வேண்டியிருந்தது. சிவபிரானை ஆராதித்து அதனைப் பெறவேணுமென்று அவன் முயன்றவளவில் இவனுக்கு இத்தனை பரிச்ரமம் ஏதுக்கென்று கருணைகொண்ட கண்ணபிரான் அவ்வர்ஜுனனை நோக்கி "ருத்ரனிடத்தில் நீ செய்ய நினைத்திருக்கிற ஆராதனையை என் காலிலே செய்து அபேக்ஷிதம் பெறுவாயாக" என்று கட்டளை யிட்டுத் தனது முழந்தாளைக் காட்ட, அங்கே அவன் சில புஷ்பங்களை யிட்டு அர்ச்சிக்க, அற்றை யிரவு கனவிலே உருத்திரக்கடவுள் அந்த புஷ்பங்களைத் தனது தலையிலே அணிந்து கொண்டுவந்து காட்சி தந்து அஸ்த்ரத்தைத் தந்து போனான். *பார்த்தோ விஜேதா மதுஸூதநஸ்ய பாதாரவிந்தார்ப்பித சித்ரபுஷ்பம், தந்நர்ச கங்காதர மௌளிமத்யே புபூவ வீர: க்ருதநிச்சிதார்த்த:* என்கிற ச்லோகம் ஆசாரியர்களால் உதாஹரிக்கப் பட்டுள்ளது காண்க. ... ... ... ... ... *

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ வேங்கடேசரவே நம:

முதலியாண்டான் ஸ்வாமி திருமாளிகை என்று புகழ்படைத்த

ஸ்ரீ கோ. க. வா அ. குமார வேங்கடாசார்ய ஸ்வாமி

திருமாளிகை வர்த்தமான பெரிய ஸ்வாமி

ஸ்ரீ கோ. க. வா. அ. குமார ஸ்ரீசைலாசார்ய ஸ்வாமி

# ஷஷ்ட்யப்தபூர்த்தி மஹோத்ஸவ ப்ரகடனம்

## திருமாளிகை சிஷ்யர்களுக்கும் அபிமானிகளுக்கும் வேண்டுகோள்

ஸ்ரீ வைஷ்ணவ சிரோபூஷா ஸ்ரீ ராமாநுஜ பாதுகா,

ஸ்ரீ வாதூலகுலோத்தம்ஸ: ஸ்ரீ தாசரதிரேததாம்.

எம்பெருமானார் தரிசனம் என்கிற சிறப்புப் பெயர் பெற்ற நம் ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் ஸதாசார்ய ஸம்பந்தத்தினால் தான் நமக்கு ஆத்மக்ஷேமம் ஏற்படு மென்பது முக்கியமான கொள்கை. ச்ரிய: பதியான எம்பெருமானிடமிருந்து [illegible]யாகவரும் நமது குருபரம்பரையில் நாயகஸ்தானம் வகிப்பவர் [illegible]நுஜர் (எம்பெருமானார்). உலகம் உய்வதற்காக எம்பெருமானார் நியமித்தருளிய எழுபத்திநான்கு ஸிம்மாஸனங்களுக்கு அதிபதிகளில் தலைவராய் விளங்கியவர் சுவாமி முதலியாண்டான். இராமபிரானுடைய அம்சாவதாரராய், எம்பெருமானுடைய பாகிநேயராய் (ஸஹோதரிபுத்ரர்) அவதரித்த இவர், ஸ்வாமியினுடைய பாதுகைகளாகவும் த்ரிதண்டமாகவும் போற்றப் பெற்றவர். ஸ்வாமி ஸந்யாஸ ஆச்ரமம் கொள்ளும்போதும் முதலியாண்டான் தவிர மற்ற தேஹபந்துக்களைத் துறந்தேன் என்று சொல்லும்படியான ஆத்மகுணபூர்த்தி படைத்தவர். ஸ்வாமி முதலியாண்டானுடைய திருவம்சத்திலுதித்த ஸ்ரீ அப்பாச்சியாரண்ணா ஸ்வாமி மணவாள மாமுனிகளுக்கு மிகவும் ப்ரியராய் வாழ்ந்தவர். இவர் மாமுனிகளால் பெருமாள் கோவிலுக்கு தர்சனப்ரப்ரவர்த்தகராய் நியமிக்கப் பெற்று தேவப் பெருமாள் ஸன்னிதியில் பல கைங்கர்யங்கள் நிர்வஹித்தார். பெருமாள் கோவிலில் துன்னுபுகழ்க் கந்தாடை தோழப்பருடைய (முதலியாண்டானின் திருப்பேரனார்) திருமாளிகையையும், பெருமாள் அவருக்கு ஸாதித்த தம் ஷட்பேரங்களில் ஒருவரான அழைத்து வாழ்வித்தவர் என்ற எம்பெருமானையும் பரிசாகப் பெற்று தர்சனம் நிர்வஹித்தவர். மேலும் இவருக்கு மாமுனிகள் தம் அர்ச்சைத் திருமேனியையும், ஆட்கொண்ட வில்லி ஜீயர் திருவாராதனமான தீமனம் கெடுத்தார் என்ற எம்பெருமானையும் ப்ரஸாதித்தார். பெருமாள் கோவில் ஸன்னிதி வீதியில் உள்ள இந்தத் திருமாளிகையையும் இதனுள் கோயில் கொண்டுள்ள மேலே சொன்ன திருக்கோலங்களையும் இன்றைக்கும் ஸேவித்து மகிழ்ந்துய்யலாம். முதலியாண்டான் ஸ்வாமி திருமாளிகை என்று ஸ்ரீ வைஷ்ணவ வுலகில் ப்ரக்யாதி பெற்ற இந்தத் திருமாளிகைக்கு கூடஸ்தராக ஸ்ரீ அப்பாச்சியாரண்ணாவின் திருக்குமாரரான ஸ்ரீ அண்ணாவிலப்பன் போற்றப்படுகிறார். ப்ரதி வருஷமும் திருமாசிக்கேட்டையன்று இவர் திருநக்ஷத்ரம் விமரிசையாகக் கொண்டாடப்படுவது யாவருமறிந்தது.

இப்படி ஒப்புயர்வற்ற புகழ்படைத்த ஆசார்ய பரம்பரையின் திருவடி ஸம்பந்தம் பெற்றுள்ள இந்தத் திருமாளிகை சிஷ்யர்களின் பாக்யம் மிகவும் கொண்டாடத்தக்கது. இந்த திருமாளிகைத் திருமுடி அடைவில் வர்த்தமான ஆசார்யர்களாய் ஸ்ரீ. உ. வே. கோ. க. வா. அ. குமார ஸ்ரீசைலாசார்ய ஸ்வாமியும், (ஸ்வாமியின் திருத்தம்பியார்) ஸ்ரீ. உ. வே. கோ. க. வா. அ. குமார வேங்கடாசார்ய ஸ்வாமியும், ஞானநுஷ்டான நிதிகளாய் சிஷ்யவர்க்கங்களின் ஆத்மக்ஷேமத்தைப் பேணிக் கொண்டு விளங்கிவருகிறார்கள்.

நம்மாழ்வார் திருவடிகளையே தஞ்சம் என்றுபற்றி ஆசார்யனை அ "தேவுமற்றறியேன்" என்ற திடமான அத்யவஸாயம் பூண்ட ஸ்ரீமதுரகவி திருநக்ஷத்ரமான சித்திரையில் சித்திரையே நம் பெரிய ஸ்வாமியின் திரு நன்னாள். நாளது பரீதாபி வருஷம் இந்த நன்னாளில் (1972 ஏப்ரல் 27உ) நம் ஸ்வாமிக்கு ஷஷ்டியப்தபூர்த்தி திருக்கல்யாண மஹோத்ஸவம் ப்ராப்தமாகியுள்ளது. இந்தத் திருநக்ஷத்திரத்தை விமரிசையாகக் கொண்டாடி சிஷ்யர்கள் ஸ்வரூப நிறம் பெறும்படியாக, இந்தத் திருமாளிகை சிஷ்ய ஸபையினர் ஒரு செயற்குழுவை ஏற்படுத்தியுள்ளனர். இந்த மஹோத்ஸவத்தை பெருமாள் கோவிலில் பத்து தினங்கள் கொண்டாடுவதென்று ஏற்பாடாகியுள்ளது. தினமும் திருமாளிகையில் திருக்கோலம் கொண்டு எழுந்தருளியிருக்கும் எம்பெருமான்கள், ஆசார்யர்கள் இவர்களுக்குத் திருமஞ்சனம், விசேஷ திருவாராதனம், அருளிச்செயல் ஸேவாகாலம் வேதபாராயணம், வித்வான்களின் உபந்யாஸங்கள் முதலிய வைபவங்களுடன் கொண்டாடி, சித்திரையில் சித்திரை நன்னாளில் சாற்றுமுறையும் நம் ஸ்வாமிக்கு திருக்கல்யாண மஹோத்ஸவமும் நடத்திவைக்க எம்பெருமானுடையதும் ஆசார்யர் களுடையதுமான அநுக்ரஹ விசேஷத்தை முன்னிட்டு நிச்சயிக்கப்பட்டுள்ளது.

இந்த மஹோத்ஸவத்தை செல்வனே நடத்த ஸுமார் ரூ. 15000-00 ஆகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இத்துடன் திருமாளிகைக்குப் பயன்படுமாறு கணிச மான அளவில் சாச்வதமான் நிதி ஒன்று அமைக்க வேண்டுமென்பதும் ஒரு குறிக் கோள் ஆகும். இந்த கைங்கர்யங்களில் அன்வயித்து இவை நல்ல முறையில் நடந்தேறுமாறு செய்வது திருமாளிகை சிஷ்யர்கள் ஒவ்வொருவருக்கும் தலையாய கடமையாகும். திருமாளிகை சிஷ்யர்களும் அபிமானிகளும் தாராளமாகப் பொரு ளுதவி பண்ணியும், நேரில் அன்வயித்தும் ஸ்வரூப நிறம்பெற்று ஆசார்ய கடாக்ஷத் திற்கு பாத்ரபூதர்களாக ஆகும்படி ப்ரார்த்திக்கிறோம்,

இந்த மஹோத்ஸவ ஸ்மாரகமாக திருமாளிகையின் சிறப்பையும், ஸ்ரீ வைஷ்ண வர்களுக்கு அவச்யம் தெரியவேண்டிய இதர விஷயங்களையும் தாங்கும் சிறப்பு மலர் ஒன்று வெளியிடுவதென்றும் முடிவாகியுள்ளது. இதில் விளம்பரங்கள் கொடுத்தோ அல்லது தங்களுக்குத் தெரிந்த தொழில் வர்த்தக ப்ரமுகர்களிடமிருந்து விளம்பரங் கள் வாங்கித் தந்தோ உபகரிக்கும்படி திருமாளிகை சிஷ்யர்களையும் அபிமானிகளையு வேண்டுகிறோம்.

இப்படிக்கு,

A. K சடகோபாச்சாரியர் (அம்பத்தூர்) கைங்கர்யக் குழுத்தலைவர்
A. ராமாநுஜாசாரி (மைலாபேட்டை) செயலாளர்
V. V. ராமாநுஜம் (திருவல்லிக்கேணி) செயலாளர்
K. K. கிருஷ்ணஸாமி அய்யங்கார் (திருவல்லிக்கேணி) நிதியாளர்

---

குறிப்பு:—மேலும் விபரங்கள் கீழ்க்கண்ட விலாஸங்களில் அறியலாம். நன்கொடைகளை இதே விலாஸங்களில் சேர்க்கவும். செக்குகளை ஸ்ரீ கோ. க. வா அ குமார ஸ்ரீ சைலாசார்ய ஸ்வாமி ஷஷ்டியப்தபூர்த்தி ஸெலிப்ரேஷன் கமிட்டிக்கு என்று எழுதவும்

Dr. V. V. ராமாநுஜம். 1-A, T.P. கோவில் லேன், திருவல்லிக்கேணி சென்னை-5 அல்லது Sri K. K. கிருஷ்ணஸாமி அய்யங்கார் 31, தெற்கு குளக்கரை, திருவல்லிக்கேணி சென்னை-5,